# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 04 புதன்கிழமை (20-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:229


## போரில் உயிரிழந்தவர்களின் சடலங்களை ஒப்படைக்கும் பணி நேற்றுக் குழம்பியது!

### பதற்ற நிலை காரணமாம்

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்20

**போர்க்களத்தில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் சடலங்களை ஒப்படைக்கும் பணி நேற்றுக் குழம்பியது.**

**சடலங்களைக் கையளிப்பதற்கு ஏற்பாடாகிய நீர்வேலித் தரவைப் பகுதியில், குறிப்பிட்ட வேளையில் ஏற்பட்ட பதற்றமே அந்தப் பணியை இடைநிறுத்தக் காரணம் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.**

சாவகச்சேரியில் கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் இடம்பெற்ற சண்டையின் போது, உயிரிழந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் சடலங்கள் எனக் கூறி 47 பேர்களின் உடல்களை இராணுவத்தினர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்திருந்தனர்.

இராணுவம், விடுதலைப் புலிகள் ஆகிய இரண்டு தரப்புகளுடனும் பேசி, அவர்களுடன் ஒரு புரிந்துணர்வு நிலைக்கு வந்து சடலங்களை நேற்று ஒப்படைக்க சர்வதேச செஞ்சிலுவைக்குழு ஏற்பாடு செய்திருந்தது.

அதற்கிணங்க நேற்றுக்காலை நீர்வேலித் தரவைப் பகுதியில் வைத்து எட்டுச் சடலங்கள் கையளிக்கப்பட்ட நிலையில் இந்தப் போர்க்கால மனிதாபிமானப் பணி இடைநிறுத்தப்பட்டது. அவ்வேளை அங்கு உண்டான பதற்ற நிலையே இதற்குக் காரணம் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கையளிக்கப்படாத சடலங்கள் மீளவும் யாழ்.போதனா வைத்தியசாலையில் இராணுவத்தினரால் நேற்று நண்பகல் ஒப்படைக்கப்பட்டன.

சடலங்கள் புலிகளிடம் கையளிக்கப்படும் வேளையில் பதற்றம் உண்டானதற்கான காரணம் என்ன என்பதனை செய்தித் தணிக்கை கருதி வெளியிடமுடியவில்லை.(அ-3-5-15-139)

## திருமலையில் 24 படையினர் நேற்றுத் தாக்குதலில் பலி!

### வில்கம் விகாரைக்கு அருகில் சம்பவம்

திருகோணமலை,செப்.20

திருகோணமலை நகரில் இருந்து வில்கம் விகாரை முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருந்த படையினரின் டிரக் மீது நேற்று பிற்பகல் 5 மணியளவில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இரு அதிகாரிகளும், 22 படையினரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

நகரில் வேலை ஒன்றுக்காக வந்திருந்த வில்கம் விகாரை முகாம் படையினர் முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் பதுங்கியிருந்த விடுதலைப்புலிகள் படையினரின் டிரக் மீது கிளைமோர் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும்-

அதன் பின்னர் ஆர்.பி.ஜி றொக்கட் மற்றும் சிறு ஆயுதங்களைக்கொண்டு புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் - நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலின்போது அந்த டிரக்கில் இருந்தவர்களில் ஒருவர் மட்டுமே உயிர் தப்பியதாகக் கூறப்பட்டது. இந்தத் தாக்குதல் காரணமாக அந்த டிரக் முழுமையாக சேதத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்துப் படையினர் தேடுதல் நடத்தினர்.

(இ-3-7-8-150)

## அஷ்ரப்பின் அமைச்சர் பதவி ரவூப் ஹக்கீமுக்கு!



கொழும்பு,செப்.20

ஹெலி விபத்தில் உயிரிழந்த அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் வகித்த துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இணைத் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும், அக்கட்சியின் தூதுக் குழுவுக்கும் இடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

இந்தப் பதவியை ரவூப் ஹக்கீமுக்கு வழங்குமாறு அக்கட்சியின் உயர்பீடம் ஜனா

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 13 அங்குல நீள வாக்குச் சீட்டு!

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான வாக்குச்சீட்டுகள் இம்முறை 13 அங்குல நீளம் உடையவையாக அச்சிடப்பட்டுள்ளன.

இதுவரை யாழ்.தேர்தல் மாவட்டத்துக்கு அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுகளில் இதுவே மிக நீளமானது என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்முறை யாழ்.மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுவதால் வாக்குச் சீட்டை மிக நீளமாக தயாரிக்கும் நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை - இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே மிக நீளமான - ஒன்றரை அடி - நீள வாக்குச் சீட்டுகள் இம்முறை கொழும்பு, திருகோணமலை,நுவரெலியா ஆகிய தேர்தல் மாவட்டங்களில் அச்சிடப்பட்டுள்ளன. (இ-9-ரி)

## ஷெல்லுக்கு இளம் தாயார் பலி!

நென்மராட்சி,செப்.20

ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கும் சத்தம் கேட்டு தனது கைக்குழந்தையுடன் பாதுகாப்புத்தேடி ஓடிய இளம் தாயார் ஒருவர் ஷெல் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரணி - இயற்றாலைப் பகுதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தாயான முருகேசு சசிகலாதேவி (வயது30) என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் கையில் இருந்த அவரது 13 நாள் கைக் குழந்தை காயம் எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டது.

இதே வேளை கடந்த ஞாயிறு இரவு முதல் தொடர்ச்சியாக ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததினால் ஏற்பட்ட பதற்றம் காரணமாக வரணி மகாவித்தியாலயம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இயங்கவில்லை.

(இ-7-117)

## முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு தொடர்ந்து பொ.ஐ.முன்னணிக்கு

### ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் அறிவிப்பு

கொழும்பு,செப்.20

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு அளித்து வரும் ஆதரவைத் தொடர்ந்து தமது கட்சி வழங்கும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் இணைத் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அமைச்சர் அஷ்ரப்பின் மறைவை அடுத்து இருகட்சிகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தூதுக் குழுவுக்கும் இடையில் நேற்று நடந்த சந்திப்பை அடுத்தே அவர் இப்படிக் கூறினார்.

கட்சியின் இணைத்தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கட்சியின் உயர்மட்டக் குழுவைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினர்.

இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்து வெளியிட்ட ஹக்கீம் தெரிவித்ததாவது :-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஜனாதிபதியின் பிரயத்தனங்களுக்கு எமது கட்சி முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

காலஞ்சென்ற அஷ்ரப் கடைப்பிடித்த சமத்துவம், ஒத்துழைப்பு போன்ற கொள்கைகளை எமது கட்சி தொடர்ந்து பின்பற்றும். பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் இதுவரை கொண்டிருந்த உறவுகள் தொடர்ந்தும் பேணப்படும்.

அமைச்சர் அஷ்ரப் பயணம் செய்த ஹெலி விபத்துக்குள்ளானது குறித்து சந்தேகம் கொண்டுள்ளோம். அது மட்டுமன்றி ஹெலி விபத்துக் குறித்து இதுவரை தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரணாகவுள்ளன.

எனவே அமைச்சர் அஷ்ரப்பின் மறைவுக்குச் சதி வேலையே காரணம் என நம்புகின்றோம். ஜனாதிபதியைச் சந்தித்த வேளை அவரும் இதே போன்ற கருத்தினையே வெளியிட்டார் - என்றார். (இ-3-7-8)

## தபால் மூலம் வாக்களிப்பதற்கான வாக்குச் சீட்டுக்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,செப்.20

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கும் யாழ். தேர்தல் மாவட்ட விண்ணப்பதாரர்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் கொழும்பிலிருந்து விமானம் மூலம் நேற்று இங்கு எடுத்து வரப்பட்டன.

யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், அரச அதிபருமான கே.சண்முகநாதன் கொழும்பிலிருந்து அவற்றை இங்கு எடுத்துவந்தார்.

கொழும்பு விமான நிலையத்தில் பெய்த மழை காரணமாக வாக்குச் சீட்டுகள் பி.ப 2.30 மணியளவிலேயே இங்கு எடுத்துவரப்பட்டன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தோனேசியாவில் தமிழ் இளைஞர் உண்ணாவிரதம் நீடிக்கிறது

கொழும்பு,செப்.20

இந்தோனேசியாவிலிருந்து தம்மை நாடு கடத்த வேண்டாம் எனக் கோரி யாழ். இளைஞர் இருவர் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பித்த உண்ணாவிரதம் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது.

கந்தசாமி கெங்காதரன், பரமலிங்கம் கண்ணதாசன் ஆகிய இருவருமே இவ்வாறு உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இதேவேளை மேற்படி இளைஞர்கள் இருவரும் அகதி அந்தஸ்து வழங்கும் நாடு ஒன்றுக்குத் தம்மை அனுப்பி வைக்குமாறு கோரி அகதி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களுடன் 9 கைதிகள் தப்பி ஓட்டம்!

கொழும்பு,செப்.20

குருவிட்ட சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் ஒன்பது பேர் அங்குள்ள ஆயுதக்கிடங்கை உடைத்து ஆயுதங்களையும் அபகரித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகளையும் இவர்கள் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றுக் காலை 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தாக்குதலுக்கு இலக்கான சிறை அதிகாரிகளில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

தப்பியோடிய கைதிகள் சிறைச்சாலைக்கு சமீபமாக வான் ஒன்றைக் கடத்தி அதில் தப்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-8)

## கல்முனையில் 60 கிலோ குண்டு வானுடன் வெடித்துச் சிதறியது!

### பொலீஸார் செயலிழக்கச் செய்தனர்

மட்டக்களப்பு,செப்.20

கல்முனை நகரில் அறுபது கிலோ குண்டு பொருத்தப்பட்ட வான் ஒன்றை நேற்றுக் கண்டுபிடித்து படையினர் அக்குண்டை வெடிக்கவைத்து செயலிழக்கச் செய்த போது அந்த வானும் தீக்கிரையாகி நாசமாகியது.

வீதிச்சோதனையில் ஈடுபட்ட பொலீஸார் பிரஸ்தாப வானை மறித்துச் சோதனையிட்ட சமயம் அந்த வானில் குண்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த வானில் இருந்து குண்டை அப்புறப்படுத்தாமல் அதை படையினர் செயலிழக்கச் செய்தனர்.

பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதன் காரணமாக வான் தீக்கிரையானதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் - நேற்று முன்தினமும் ஒரு வான் குண்டுடன் கண்டுபிடிக்கப்பட்டதும் அதில் இருந்த குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டதும் தெரிந்தவையே.

இந்தச் சம்பவம் தொடர்பாக மூவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குண்டு பொருத்தப்பட்ட நிலையில் வான்கள் திரிவதாகக் கிடைத்த தகவலை அடுத்து வீதிச்சோதனைகளை படையினர் அதிகரித்துள்ளனர்.

(இ-3-8)

## கேள்வி அறிவித்தல்

அரசாங்க அதிபர் மாவட்ட செயலகம் (கச்சேரி)
யாழ்ப்பாணம்.

14ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரமான கேள்வி அறிவித்தல் சம்பந்தமானது.

| | | |
|---|---|---|
| வேலை விவரம்:- | 1. புனருத்தாருன வேலை நீர்வாகக் கட்டடத் தொகுதி, சுற்றியல கூடு, சங்கானை. | பதிவு செய்யும் தரம் எம்-6 இலம் அதற்கு மேலும் உடையவர்கள் விண்ணப் பிக்கலாம் |

மாவட்டச் செயலகம்,
கச்சேரி,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

க.சண்முகநாதன்
அரசாங்க அதிபர்,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

(C/12997)

## உதவிக் குருக்கள், மங்கள வாத்தியக் கலைஞர் தேவை

**யாழ்.வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்துக்கு**

நித்திய, நைமித்திய கிரியைகளில் கடமையாற்றுவதற்கு உதவிக்குருக்கள் ஒருவரும் மங்கள வாத்தியக் கலைஞரும் தேவை.

சம்பள விவரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். விரும்புவோர் **24.09.2000 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு** கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**தர்மகர்த்தா,**
**வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்,**
**கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(78577)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை வளர்ச்சியில் அக்கறை கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவரும் பாடசாலையின் முன்னாள் பழைய மாணவர் சங்கச் செயலாளருமான

### நமசிவாயம் சிவகுமார்

அவர்கள் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நியமிக்கப் பட்டமைக்காக எமது பாடசாலைச் சமூகம் அவரைப் பெருமிதத்துடன் பாராட்டி வாழ்த்துகின்றது.

- அதிபர்

யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.

(78576)

## அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் - இலங்கை**
**உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2000**
**நேர்முகப் பரீட்சை**

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பித்துள்ள தகுதியான மாணவர்களுக்கான நேர்முகப்பரீட்சை 23.09.2000 சனிக்கிழமை அன்று காலை 9.30 மணி - மாலை 4.00 மணிவரை பல்கலைக்கழக சபா மண்டபத்தில் நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு:** நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் உடற்கல்வி கற்கை நெறிப் பிரிவில் பார்வையிடலாம்.

பதிவாளர்
18.09.2000

(C/12995)

## சீரடி பாபா பிறந்ததின நிகழ்வுகள்

யாழ்.பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை சீரடிபாபா பிறந்ததின நிகழ்வுகள் இடம்பெறும்.

சீரடி பாபாவின் சரித்திரம் வாசிக்கப்படும். இந்த நிகழ்வுகள் 27 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெற்று அன்று நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவடையும். (ஐ)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்.மைய றோட்டறக்ட் கழக செயற்றிட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கழக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**

Further to our advertisement dated 26.07.2000, the Closing date to entertain applications for the undermentioned posts has been extended upto 30th September 2000.

1. Senior Assistant Librarian Grade I / Senior Assistant Librarian Grade II / Assistant Librarian.
2. Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Botany / Computer Science / Chemistry / Mathematics and Statistics / Physics / Zoology.

REGISTRAR
University of Jaffna.
Sri Lanka.
19th September 2000. (C/12998)

## ராஜா
(யாழ்ப்பாணம்)

**கார்த்திக், ரோஜா, அஜித்**
மற்றும் பலரின் நடிப்பில்

**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**

காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே)

(C/12920)

## நாகம்ஸ்
(சுன்னாகம்)

**விஜய், சிம்ரன், மணிவண்ணன்** நடிப்பில்
இனிய பாடல்கள் நிறைந்த
உள்ளம் கொள்ளை
கொள்ளும் பல்சுவை
ததும்பிய காதல் காவியம்

**துள்ளாத மனமும் துள்ளும்**

(C/12999)

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

## பாராட்டுகின்றோம்



சங்குவேலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த

### இராசேந்திரம் லோகேந்திரராஜா

அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். சங்குவேலி தெற்கு தமிழ்க் கலவன் பாடசாலைப் பழைய மாணவரும், இந்து வாலிபர் சங்கம், இளைஞர் விவசாயக் கழகம் ஆகியவற்றின் முன்னாள் செயலாளரும், காளி வைரவர் ஆலய அபிமானியுமான அன்னாரின் சேவை சிறக்க மனமாரப் பாராட்டுகின்றோம்.

காளிவைரவர் ஆலய அடியார்கள்,
சங்குவேலி தெற்கு.

(C/13003)

## புற்றளை சித்தி விநாயகர் ஆலய

**பரிபாலன பராமரிப்புச் சபை**
**கட்டட நிதிக்கான**
**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு**

மேற்படி சபையினரின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 13-09-2000 அன்று செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்றது.

முடிவுகள் பின்வருமாறு:

- ★ முதலாம் பரிசு இல. - 784
- ★ இரண்டாம் பரிசு இல. - 2033
- ★ மூன்றாம் பரிசு இல. - 815

**ஆறுதல் பரிசுகள் இல.:- 1843, 2949, 403, 1494, 1017.**

மேற்படி பரிசுக்குரியவர்கள் 12 - 10 - 2000 இற்கு முன்னதாக பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

*காலதாமதத்திற்கு வருந்துகின்றோம்.*

- செயலாளர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
சி.சித்திரவேல்,
*கால்நடை வைத்திய பணிமனை, சிலையடி, புலோலி.* (C/78567)

## எமிலியானுஸ்பிள்ளை தொழில்நுட்ப நிறுவனம்

**ஊர்காவற்றுறை**

மேற்படி நிறுவனத்தில் பின்வரும் பயிற்சி வகுப்புகள் இலவசமாக ஆரம்பிக்க உள்ளதால் விண்ணப்பம் கோரப்படுகின்றன.

1. மரவேலை
2. மின் இணைப்பு.
3. தட்டச்சு
4. மீள முறுக்குதல் (Electrical Winding)

மேற்படி பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் அனுப்பும் முடிவுதிகதி **26.09.2000.**

(78570) - இயக்குநர்.

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவருமாகிய பெ.கனகசபாபதி அவர்களின் அன்புத் துணைவியார்

### தவஜோதி கனகசபாபதி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*தலைவரும்,*
*பணியாளர்களும், பணியாளர்களும்.*
*சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்.*

(C/12996)

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் சேனாதிராசா

**(பெரியபளை, பளை)**

தர்மக்கேணி, பளையைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை மற்றும் பளையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சேனாதிராசா நேற்று (19.09.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - அமுதாத்தை தம்பதிகளின் அன்பு மகனும், தங்கமுத்து, முத்துத்தம்பி, குமாரசாமி, நடராசா, அன்னலக்சுமி மற்றும் காலஞ்சென்றவர்களான நல்லதுரை, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2000) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சித்தன்கேணியிலுள்ள அன்னாரின் தற்காலிக வதிவிடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
Dr.மு.கருணாகரன்,
கு.ரவீந்திரன் (ஆசிரியர்)
(பெறாமக்கள்)


*C/O S.திருச்செல்வம்,*
*சித்தன்கேணி.*
*(சிவன் கோயில் அருகாமை ஒழுங்கை)*

(78571)


## யாழ். மாவட்டம்

**அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே!**
**எனது அரசியல் நண்பர்களே!**
**உதய சூரியனுக்கு ☒ இட்டு**
**தமிழர் விடுதலைக் கூட்டணியை**
**வெற்றி பெறச் செய்யுங்கள்.**

**எனது இலக்கமான ☒ க்கு மேலே**
**புள்ளடி இட்டு ஆதரியுங்கள்.**
**உங்கள் ஆதரவை வேண்டி நிற்கும்**
**(தமிழரசு) க.சின்னத்துரை**
**உபதலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி**



தமிழ் ஈழத் தந்தை
எஸ்.ஜே.வி.செல்வநாயகம்





(தமிழரசு)
க.சின்னத்துரை

(78225)

## 'நக்கீரன்' கோபால் காட்டுக்குச் செல்கிறார்

சென்னை,செப்.20

கர்நாடக, தமிழக அரசுகளின் தூதராக 'நக்கீரன்' கோபால் இன்று மீண்டும் வீரப்பனைச் சந்திக்கக் காட்டுக்குப் புறப்பட்டுச் செல்கிறார்.

உச்ச நீதிமன்றத்தின் முடிவி



'நக்கீரன்' கோபால்

னால் 'தடா' கைதிகளின் விடுதலையில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து வீரப்பனிடம் விளக்கமளித்து, ராஜ்குமார் உள்ளிட்ட பணயக் கைதிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் பெறவே அவர் செல்வதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# 'தடா' கைதிகளின் வழக்குக் குறித்த கர்நாடக அரசின் கோரிக்கைகளை இந்திய உச்சநீதிமன்றம் நிராகரித்தது!

## கன்னட நடிகர் ராஜ்குமாரின் விடுதலை மேலும் தாமதம்!!

புதுடில்லி,செப்ரெம்பர்.20

**வீரப்பனால் கடத்தப்பட்டுள்ள நடிகர் ராஜ்குமார் உட்பட 4 பேரையும் விரைவில் விடுவிக்கும் கர்நாடக அரசின் எண்ணத்துக்கு இந்திய உச்ச நீதிமன்றம் முட்டுக்கட்டை போட்டுவிட்டது.**

**விரப்பனின் சகாக்களை 'தடா' வழக்குகளிலிருந்து விடுவிக்கும் முயற்சி இதனால் தாமதமாகியுள்ளதே இதற்குக் காரணம்.**

நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பன் விதித்திருந்த முக்கிய நிபந்தனையின்படி,கர்நாடகச் சிறைகளில் வீரப்பனுக்கு உதவியதற்காக அடைக்கப்பட்டிருந்த 51 'தடா'கைதிகளை விடுதலை செய்யக் கர்நாடக அரசு நடவடிக்கை எடுத்தது.

இதனை எதிர்த்து வீரப்பனால் கொல்லப்பட்ட பொலீஸ்அதிகாரி சகீல் அகமது என்பவரின் தந்தையான அப்துல் கரீம் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

நடிகர் ராஜ்குமாரை விடுவிக்க வேண்டிய கட்டாயத்தை விளக்கி கர்நாடக அரசு பதில் மனு ஒன்றை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

அந்த மனுவில் வீரப்பனுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தடாக் கைதிகளை விடுவிக்கும் மனு மீது விரைவில் விசாரணை நடத்த வேண்டும் என்றும் -

அவர்களது பிணை மனுக்களை விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் -

கர்நாடக அரசு வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை நேற்று உச்ச நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது கர்நாடக அரசின் இரு கோரிக்கைகளையும் நிராகரித்த உச்ச நீதிமன்றம், அப்துல் கரீமின் மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது.

அத்துடன் மறுவிசாரணையை அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

இந்த நிலையில் -

நடிகர் ராஜ்குமார் உட்பட 4 பேரை வீரப்பன் கடத்திச் சென்று 50 நாள்கள் ஆகிவிட்ட நிலையில் அவர்களின் விடுதலை மேலும் பல நாள்கள் தாமதமாகலாம் என்று கருதப்படுகிறது. (ஒ)

### குவைத் எச்சரிக்கை

குவைத்சிற்றி,செப்.20

தங்களுக்கு எதிராக ஈராக் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால் அதற்கான விலையை அது கொடுக்க வேண்டியிருக்கும் என்று குவைத் எச்சரித்துள்ளது.

### மசகுஎண்ணெய் விலை உயர்வு

நியூயோர்க்,செப்.20

கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவில் மசகுஎண்ணெயின் விலை உயர்ந்துள்ளது.

நியூயோர்க்கில் ஒரு பீப்பாய் மசகுஎண்ணெயின் விலை 37 டொலராகவும், பிரிட்டனில் 34.8 டொலராகவும் உயர்ந்துள்ளது.

### முன்னாள் பிரதமர் போராட்டம்

ஊட்டி,செப்.20

பச்சைத் தேயிலைக்கு விலை உயர்த்தக் கோரி ஆதரவாளர்களுடன் ஊட்டியில் சாலை மறியல் போராட்டம் நடத்திய முன்னாள் இந்தியப் பிரதமர் தேவகௌடா பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு அகற்றப்பட்டார்.

### சுரங்க விபத்தில் 10 பேர் பலி!

பெய்ஜிங்,செப்.20

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 10பேர் உயிரிழந்ததாகவும், அத்துடன் 15 பேரைக் காணவில்லை என்றும் கூறப்படுகின்றது.

### ரஷ்ய அதிபர் இந்தியா விஜயம்!

எதிர்வரும் ஒக்டோபர் 2ஆம் திகதி ரஷ்ய அதிபர் விளாடிமிர்புடின் இந்தியாவுக்கு விஜயம் செய்ய உள்ளார்.அப்போது இந்திய நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்துவார்.

### தேர்தலில் வெற்றி

போர்ட் பிளேயர்,செப்.20

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் தி.மு.க.கூட்டணி பெரும் வெற்றி பெற்றுள்ளது.

உலக அரங்கில்

தாய்லாந்துப் பாடசாலைகளில்

## மாணவர்களை அடிக்க ஆசிரியர்களுக்குத் தடை

பாங்கொக்,செப்.20

தாய்லாந்துப் பாடசாலைகளில் மாணவர்களை ஆசிரியர்கள் அடித்துத் தண்டிப்பதற்குத் தடை விதிக்கப்பட உள்ளது.

எதிர்வரும் நவம்பர்மாதம் முதலாம்திகதி முதல் இதற்கான அரசு ஆணை நடைமுறைப்படுத்தப்படும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உடல்ரீதியாகக் கடுமையாகத் தண்டிக்கப்படும் குழந்தைகள் பெரியவர்களானதும் வன்முறை, கொடூரம ஆகியவற்றைக் கொண்டவர்களாக மாறுவதாக மனோதத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருப்பதாகவும் -

சர்வாதிகாரிகளான ஹிட்லர், ஸ்டாலின், பொல்போட் போன்றோர் சிறுவயதில் கடுமையாகத் தண்டிக்கப்பட்டிருந்ததை அவர்கள் சான்றுகளாகக் காட்டியுள்ளதாகவும் தெரிவித்த அந்த அதிகாரி -

இவற்றின் அடிப்படையிலேயே தாய்லாந்து அரசு உத்தேச சட்டத் தடையை அமுல்படுத்தத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்தார். (ஒ-8)

## ஐ.நா. அனுமதி கிடைக்கும் முன்னர் ஈராக் சென்ற ரஷ்ய விமானம்!

பாக்தாத்,செப்.20

ஐ.நா.சபையின் அனுமதி கிடைக்கும் முன்னரே மருந்துப் பொருள்களை ஏற்றிக் கொண்டு ரஷ்ய விமானம் ஈராக்கில் தரையிறங்கியது.

வளைகுடா யுத்தத்தை அடுத்து 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஐ.நா. ஈராக்கிற்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்தது. அத்துடன் விமானப் போக்குவரத்துக்கும் தடை விதித்திருந்தது.

சமீபத்தில் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு ரஷ்யா ஐ.நாவிடம் அனுமதி கோரியிருந்தது. இதற்கான அனுமதியை ஐ.நா. பாதுகாப்புச்சபை வழங்குவதற்கு முன்னதாகவே எண்ணெய் வள நிபுணர்கள் 12பேர் அடங்கிய குழுவையும், 5தொன் மருந்துப் பொருள்களையும் ஏற்றிய ரஷ்ய விமானம் ஈராக் தலைநகர் பாக்தாத் சென்றடைந்துள்ளது.

ஈராக் மீது விதிக்கப்பட்ட விமானத் தடைகளை மொஸ்கோ நிராகரிப்பதையே இது காட்டுவதாக இந்த விமானத்தில் வந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஈராக் மீதான விமானத் தடையைத் தொடரவேண்டும் என்று ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் அமெரிக்காவும், பிரிட்டனும் வலியுறுத்துகின்ற போதிலும், ரஷ்யாவும், பிரான்ஸும் அதனை ஏற்க மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## காஷ்மீர்ப் பிரச்சினையில் ஐ.நா. தலையிட வேண்டும்!

### பாகிஸ்தான் கோரிக்கை!!

இஸ்லாமாபாத்,செப்.20

காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க ஐ.நா.தலையிட வேண்டும் என்று பாகிஸ்தான கோரியுள்ளது.

55ஆவது ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றிய பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சர் அப்துல் சதார் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தமது நாடு அமைதியான முறையில் பிரச்சினையைத் தீர்க்க விரும்புகின்றபோதும், இந்தியா அதனை விரும்பாத வகையில் மறுப்புத் தெரிவித்து வருகிறது என்றும் -

ஐ.நா.பாதுகாப்புச சபை இந்தப் பிரச்சினையில் தலையிட்டு செயற்பட வேண்டிய பொறுப்பைக கொண்டிருக்கிறது என்றும் -

அவர் கூறினார்.

பிரச்சினையைத் தீர்க்காமல் வெறுமனே பேசிக் கொண்டிருப்பதால் ஐ.நா.பாதுகாப்புச் சபை அதன் பொறுப்பை இழக்கிறது என்று பாகிஸ்தானிய அமைச்சர் தனது உரையில சுட்டிக்காட்டினார். (ஒ-8)

## ஊடகவியலாளர்கள் உட்பட பலர் ஐவரிகோஸ்ட்டில் படுகொலை!

### சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிப்பு!!

அபிஜான்,செப்.20

மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட்டில் இராணுவ ஆட்சியாளர்களால் ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள் உட்படப் பலர் படுகொலை செய்யப்பட்டு வருவதாகச் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த மேமாதம் அங்கு சென்று நேரடி விசாரணைகளை நடத்திய பின்னர் சபை தற்போது வெளியிட்ட அறிக்கையிலேயே இதனைக் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கிறிஸ்மஸ் காலத்தில் இராணுவச் சதிப் புரட்சியினால் அதிபரான ஜெனரல் ரொபேர்ட் கைனின் நேரடி மேற்பார்வையில் இயங்கும் இராணுவக் குழு ஒன்றே இந்தப் படுகொலைகளைச் செய்துவருவதாகவும் மன்னிப்புச்சபை அறிக்கையில் கூறியுள்ளது.

இதற்கிடையில் அதிபா ரொபேர்ட் கைனை அவரது இல்லத்தில் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் நால்வர் சுட்டுக்கொல்ல முயன்றதாவும் -

அதிபரின் மெய்க் காவலர்கள் இருவர் கொல்லப்பட்ட போதும் கொலை முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டதாகவும், இராணுவ அரசு அறிவித்துள்ளது. (ஒ-8)

### பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு!

இஸ்லாமாபாத்,செப்.20

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் சனநடமாட்டம் மிகுந்த சந்தை ஒன்றில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 12பேர் கொல்லப்பட்டனர். 20க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்புக்கு எவரும் இதுவரை பொறுப்பேற்கவில்லை என்று பாகிஸ்தானியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஒ)

## பேச்சில் காலத்தை வீணடிக்காமல் தீர்வைக் காணவேண்டிய தருணம் இது!

### இஸ்ரேலிய உதவி அமைச்சர் வலியுறுத்தல்

"இது பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து காலத்தை வீணடிக்கும் தருணமல்ல; தீர்வொன்றைக் காண வேண்டிய நேரமாகும்."

இவ்வாறு இஸ்ரேல் வெளியுறவுத்துறை உதவி அமைச்சர் ஷ்லோமோ பென்அமி வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேலிய, பலஸ்தீனப் பிரதிநிதிகள் ஜெரூஸ லேத்தில் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அந்தப் பேட்டியில் -

காலம் விரைவாகச் சென்று கொண்டிருப்பதை அனைவரும் உணர்ந்து, தீர்வொன்றை விரைவாகக் காணவேண்டும் என்று தெரிவித்த பென்அமி இஸ்ரேலியப் பிரதமர் பராக் மேற்கொண்ட துணிச்சலான வழிமுறைகளைப் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தும் பின்பற்றினால் தீர்வு விரைவில் கிட்டும் என்றும் கூறினார்.

ஜெருசலேம் குறித்து உதவி அமைச்சரிடம் கேட்கப்பட்ட போது - ஜெருசலேம் யூதர்களின் மதஸ்தலம் என்பதால் சம்பிரதாய பூர்வமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும் -

பேச்சு வார்த்தைகளில் எந்தவொரு விட்டுக்கொடுப்பையும் பலஸ்தீனத் தரப்பினர் மேற்கொள்ளவில்லை என்றும் -

அவர் தெரிவித்தார். (ஒ-4)

## பாலியல் அடிமைகளான பெண்கள் ஜப்பான் அரசுக்கு எதிராக வழக்கு!

வாஷிங்ரன்,செப்.20

இரண்டாம் உலக மகாயுத்தம் இடம்பெற்ற சமயத்தில் பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தப்பட்ட 15 பெண்கள் ஜப்பானிய அரசு மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர். அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் ஜப்பானிய இராணுவ வீரர்களைத் திருப்திப்படுத்த தம்மைப் பிடித்துச் சென்று பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தியதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ள இந்த மேலைநாட்டுப் பெண்கள், ஜேர்மனிய நாஜிக்களைப் போன்று ஜப்பானியர்களும் இனத்துவேஷத்துடன் இழிவாகத் தம்மை நடத்தியதாகக் கூறியுள்ளனர்.

உலக மகாயுத்தக் காலப் பகுதியில் ஜேர்மனியில் பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்தப்பட்ட பெண்கள் ஜேர்மனிக்கு எதிரான வழக்குகளில் இதுவரை 5ஆயிரத்து 200 கோடி டொலர்கள் நஷ்டஈடாகப் பெற்றுள்ளதும் -

ஜப்பானுக்கு எதிராக இத்தகைய வழக்குத் தொடுக்கப்படுவது இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ-4)

## இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர்

**திரு. பெ. கனகசபாபதி**

அவர்களின் அன்பு மனைவி

### தவஜோதி கனகசபாபதி

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர் சபை,
பணியாளர்கள்.

தென்மராட்சி மேற்கு,
பல நோ. கூ. சங்கம், கைதடி.
தற்காலிக முகவரி: இணுவில். (சி/13002)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் ப. நோ. கூ. சங்கத் தலைவரும் எமது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய

**பெ. கனகசபாபதி**

அவர்களின் அன்பு மனைவியார்

திருமதி

### தவஜோதி கனகசபாபதி

அவர்கள் காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செ. செல்வராசா (நாதன்)
குடும்பத்தினர்
சி. ஜெயபாலசிங்கம்
குடும்பத்தினர்

கொக்குவில். (78579)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி ரவீந்திரன்

(சங்கத்தானை)

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ரவீந்திரன் 18—09—2000 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி—சரஸ்வதியின் மகனும் தம்பிராஜா—காலஞ்சென்ற வள்ளிநாயகியின் மருமகனும் தயாநிதியின் (லண்டன்) அன்புக் கணவரும் குகனேசன் (திருமலை), தயாபரன் (U. K.), பாஸ்கரன் (கிளிநொச்சி), சிவகுமார், புவனேந்திரன் (கனடா), கலாநிதி (தாவடி), நளாயினி (U. K.), மலர்விழி சங்கத்தானை) ஆகியோரின் சகோதரனும் சுதாமதி, சந்தானலட்சுமி (ஆசிரியை, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), பத்மலோசினி (டென்மார்க்), நந்தகுமார் (பொது முகாமையாளர், யாழ். வர்த்தக தொழிலாளர் கூ. சங்கம்), ஜெயக்குமார் (படவரைஞர் — நீர்ப்பாசனத் திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல்:
தம்பிராஜா நந்தகுமார்
(மைத்துனர்)

இல. 03, செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (78583)

### நாகமுத்து தங்கராசா

(நயினாதீவு)

யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும், நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து தங்கராசா அவர்கள் நேற்று (19-09-2000) நயினாதீவில் காலமானார்.

அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், நாகமுத்து—நாகம்மா தம்பதிகளின் புதல்வனும், வைரமுத்து—வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும், நாகராஜேஸ்வரி (தங்கராணி), நாகபரமேஸ்வரி, நாகசிவனேஸ்வரி, காலஞ்சென்ற நவரெத்தினராஜா, நாகவரவேஸ்வரி (சுவிஸ்), அமிர்தராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாதேவன் (வர்த்தகர்), யுகநாதன், கருணகுமார், நவநீதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம், அன்னலெட்சுமி, தயிரியலெட்சுமி மற்றும் நாகராசா, நாகபுஸ்பம், நாகரெத்தினம் (கோப்பால்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் குழந்தைவேலு, அன்னலெட்சுமி இரத்தினசபாபதி, சபாரெத்தினம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மயூரா, மயூகரன், நவரூபன், சாந்தரூபன், சோதிரூபன், நவஜெனனி, நிதர்ஷிகா, வேணுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.9.2000) புதன்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் நயினாதீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
செ. மகாதேவன் (அத்தான்)
(மருமகன்)
(வெற்றிலைக்கடை, யாழ்ப்பாணம்)

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (78584)

## உயிரிழப்பு

கடந்த 17 ஆம் திகதி கிளாலிப் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற மோதலில் கலையருவி (சின்னத்தம்பி சந்திரமலா—யாழ்ப்பாணம்) என்பவரும் தமது தரப்பில் உயிரிழந்ததாக நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் தமது புலிகளின் குரல் வானொலி மூலம் அறிவித்தனர். (இ-8)

## தாக்குதல் வழக்கு 23 ஆம் திகதி

யாழ்ப்பாணம், செப். 20

உடுவிலைச் சேர்ந்த இளைஞன் ஒருவரைப் படையினருடன் சேர்ந்து பொது மகன் ஒருவர் தாக்கிய தாகக் கூறப்படும் வழக்கு விசாரணை அடுத்த மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது.

உடுவிலைச் சேர்ந்த வைத்திலிங்கம் உதயராசா என்பவரைப் படையினர் கைது செய்து தடுத்து வைத்த சமயம், அதே இடத்தைச் சேர்ந்த அரியரத்தினம் ஹேமச்சந்திரா என்பவர் தாக்கியதாகத் தொடரப்பட்டுள்ள வழக்கு மல்லாகம் நீதிவான் பா. சுப்பிரமணியம் முன் எடுக்கப்பட்டது.

இந்த வழக்கு மீதான விசாரணை அடுத்த மாதம் 23 ஆம் திகதி முதல் இடம்பெறும் என்று நீதிவான் அறிவித்தார். (இ-3)

## இன்றைய உதைபந்தாட்டம்

வலிகாமம் கல்வி வலய உடுவில் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

★ இணுவில் மத்திய கல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

★ சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகாஜன வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

★ சுன்னாகம் மயிலணி சைவ மகாஜன வித்தியாலயம் எதிர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

★ ★ ★

வலிகாமம் கல்வி வலய சங்கானைக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

★ மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை எதிர் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

★ வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் அராலி இந்துக்கல்லூரி.

★ ★ ★

வலிகாமம் கல்வி வலய சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

மாதகல் சென். யோசேப் வித்தியாலயம் எதிர் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி. (ஐ-86)

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராசா

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும், U. N. D. P. உத்தியோகத்தரும்)

கரவெட்டியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராசா 19-09-2000 அன்று காலமாகிவிட்டார்.

இவர் திருமதி திரேசா வயிலற்றின் (பேபி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - இயவேற்பிள்ளை ஆகியோரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற இன்பநாதன் - கிறிஸ்ரினம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் தர்ஷினி (H. F. C. A/L 2000 கலை), தர்மினி (H. F. C. A/L 2002 கலை), நிஷாந்தினி (H. F. C. ஆண்டு 11), சுதர்ஷன் S. P. C. ஆண்டு 9), யாழினி (H. F. C. ஆண்டு 7) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்ராசா, தங்கராணி (கரவெட்டி), ஞானராசா (கொழும்பு), யோசப்நவரட்னராசா (கனடா), இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராசா (லண்டன்), ஜெயராசா (பிரான்ஸ்), மரிய இசிடோரா (பவா, லண்டன்), ஆனந்தராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற ஜீவரத்தினம், டொன் பொஸ்கோ (சில்லாலை) யோசப் சேவியர் (கரவெட்டி), றோசலின் ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21-09-2000) மாலை 3.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித திருமுழுக்கு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் புனித கொஞ்செஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
திரேசா வயிலற்
(மனைவி)

2, இராசாவின் தோட்ட ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (78581)

### திருமதி கனகசபாபதி தவஜோதி

சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு, இணுவிலைச் சேர்ந்த திருமதி கனகசபாபதி தவஜோதி அவர்கள் காலமானார்.

அன்னார் பெ. கனகசபாபதி (தலைவர்-நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், தலைவர், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை) அவர்களின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் (20-09-2000) இன்று புதன்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
பெ. கனகசபாபதி.
(கணவர்)

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு. (78562)

### திருமதி இராமலிங்கம் சின்னத்தங்கம்

மீசாலையைப் பிறப்பிடமாகவும் கோயிலாமனையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சின்னத்தங்கம் 19-9-2000 அன்று இறைபதமெய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்புத் துணைவியாரும், கதிர்காமு, காலஞ்சென்ற கந்தப்பு ஆகியோரின் சகோதரியும், சின்னத்தம்பி, குலசிங்கம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), தவமணி, முருகேசு (ஆஸ்திரேலியா), குமரையா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சுப்பிரமணியம், நல்லகுருநாதன், பவளம் ஆகியோரது பாசமிகு தாயாரும், செல்லாச்சி, இராசம்மா இளையதம்பி, சிவராணி (ஆஸ்திரேலியா), சித்திரா (ஆஸ்திரேலியா), இளைய தம்பி ஆகியோரது அன்பு மாமியாரும், கமலேஸ்வரி, பாலசுப்பிரமணியம், சறோஜாதேவி, இராஜேஸ்வரி, கலாநிதி, தவமணி, குசலா, ஜெயந்தி, யமுனா, காலஞ்சென்ற இராகுலா, அனுலா, கலைச்செல்வன், ரமணன், ராகவன், சாம்பவி, மாதங்கி, இராசலிங்கம் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி), மல்லிகாதேவி, கருணாதேவி, வசந்தாதேவி, ரேகுணாதேவி ஆகியோரது பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் தல்லையப்புலம் கரவெட்டியில் இன்று (20-9-2000) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. இராசலிங்கம் (பேரன்)
(யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி-ஆசிரியர்)

தல்லையப்புலம்,
கரவெட்டி. (சி/13000)

உதயன்

## தேர்தல ஆணையாளரின் "ஸ்ரிக்கர்" விவகாரம

ஜனநாயகத்தின் ஆணிவேராக விளங்குவது வாக்குரிமை; அதன் நடைமுறைத் திட்டமான தேர்தல். இந்தத் தேர்தல் நீதியாகவும் நியாய மாகவும் மோசடிகள், வன்முறைகள் இன்றியும் நடைபெற்றாலேயே மக்கள் தமக்கு விரும்பியவர்களைத் தெரிவு செய்து தமது பிரதிநிதிகளாக்க முடியும்.

தேர்தலின் முக்கியத்துவம் கருதி பல நாடுகளில் தேர்தல் ஆணையாளர் சுதந்திரமாக இயங்கவும் அதிகாரங்கள் அதிகம் கொண்டவராகச் செயற்படவும் வகை செய்யப்பட்டுள்ளது. பதவியில் உள்ள அரசாங்கமோ எதிரணியினரோ செல்வாக்குச் செலுத்த முடியாத ஆளுமையும் நடுவு நிலைமையும் உள்ளவரே இப்பதவிக்கு நியமிக்கப்படுவதுண்டு.

இலங்கையிலும் தேர்தல் ஆணையாளர் அதிகாரமுள்ளவராகவும், சுயேச்சைக்காகச் செயற்படக்கூடியவராகவும் சட்ட வசதி செய்யப்பட்டுள்ளது. எனினும் கடைசியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும், வயம்ப மாகாண சபைத் தேர்தலின் போதும் மோசடிகளும் குளறுபடிகளும் நிறைய இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அண்மைக்காலத் தேர்தல்களின் போது தேர்தல் வன்செயல்கள் அதிகரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஒரு பின்னணியில், அடுத்த மாதத்தில நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் மோசடியும் ஊழலும் இல்லாதவாறு நடைபெற வேண்டும் என்று தேர்தல் ஆணையாளராகப் பதவி வகிப்பவர் சிந்திப்பது இயல்பு; அவ்வாறே சிந்திக்கவும் செயற்படவுமவேண்டும். இல்லையேல் அவருக்கு அந்தப்பதவிக்குரிய தகுதியும் ஆளுமையும் இல்லை என்றாகி விடும்.

தமது பணியைச் சீராகவும் நேராகவும் செய்யவேண்டும் என்ற பொறுப்புடன் புதிது புதிதாகச் சில உத்திகளையும் நடைமுறைகளையும் அறிமுகப்படுத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உண்டு. அந்த வகையில் வாக்குச் சீட்டுகளில் விசேட 'ஸ்ரிக்கர்'களை ஒட்டும் நடைமுறையைக் கையாள விரும்பினார் இன்றைய தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா.

அந்த 'ஸ்ரிக்கர்'கள் உரிய பாதுகாப்புடன் அச்சிடப்படவில்லை என்று காரணம் காட்டி, அரசாங்கத் தரப்பினர் இதனை ஒரு விவகாரமாக்கி உள்ளனர். வாக்குச் சீட்டில் 'ஸ்ரிக்கர்' ஒட்டும் புதிய முறையை நீக்கிவிட வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளரின் நடத்தை சந்தேகத்துக்கு உரியது என்றும் சர்ச்சை கிளப்பி வருகின்றனர். இதனால் ஒரு முறுகல் நிலை உருவாகியுள்ளது.

அது மட்டுமன்றி, தயானந்தாவை தேர்தல் ஆணையாளர் பதவியிலிருந்து விலகச் செய்து அல்லது விலக்கி புதிய ஒருவரை நியமிக்கலாமா என்று இரகசியமாக ஆராய்வதாகக் கூறப்படுகிறது. இது குறித்து சட்ட ஆலோசனைகள் கூட நடைபெற்றதாக (ஊர்ஜிதமற்ற) தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாக்குச் சீட்டுக்களில் 'ஸ்ரிக்கர்' ஒட்டுவது தமது இரகசியத் திட்டங்களில் ஒன்றெனவும் இன்னும் பல திட்டங்கள் தம்மிடம் உண்டென்றும், 'ஸ்ரிக்கர்' அச்சிடுவது அம்பலமாகி விட்டதால் தில்லுமுல்லுகள் நடைபெறும் எனக் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தேர்தல் ஆணையாளர் எடுத்துச் சொல்லியுள்ளார்.

எனவே, இது விடயத்தில் அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமாயின், நிச்சயமாக அது, சுதந்திரமாக நடைபெற வேண்டிய தேர்தலில் அரசு தலையிட்டதாகவே முடியும். அவ்வாறு செய்யுமாயின் வெளிநாடுகளில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைப்பதால் உண்டாகக் கூடிய பலன் என்ன?

நாட்டின் பல பகுதிகளில் - குறிப்பிட்ட தேர்தல் மாவட்டங்களில் - கள்ள வாக்குப் போடுவது, ஆள்மாறாட்டம் செய்தல் ஆகிய மோசடிகள் நடைபெறும் என்பது அந்தந்தப் பகுதி மக்களுக்கு, முந்திய அனுபவங்கள் மூலம் தெரியும். யாழ்ப்பாண மக்களுக்கும் இந்த அனுபவம் உண்டு. வாக்காளர்களில்பலர் தமது சொந்தப் பகுதிகளில் இப்போது வாழவில்லை. வேறு பலர் வெளிமாவட்டங்களில் உள்ளார்கள்.

ஆகையால், தேர்தல் ஆணையாளர் யாழ்ப்பாண மாவட்டத்தில் எவராலும் உடைக்க முடியாத இரகசியத் திட்டம் - உத்தி - ஒன்றைப் புகுத்துவாரா? அதில் அவர் கவனமெடுப்பார் என நம்புகிறோம்.

# அஷ்ரப்புடன் ஹெலியில் சென்ற இளைஞன் யார்?

## மீட்கப்படாத சடலம் அவருடையதா?

கொழும்பு,செப்.20

அமைச்சர் அஷ்ரப்புடன் ஹெலிகொப்டரில் பயணம் செய்த இனந்தெரியாத தமிழ் இளைஞர் யார் என்பது விசாரணையாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் தனது உத்தியோக பூர்வ இல்லத்திலிருந்து பம்பலப்பிட்டி பொலீஸ் மைதானத்துக்கு வருகைதந்த போது அமைச்சரோடு வந்த மோட்டார் வாகனங்களில் ஒன்றில் இந்த இளைஞரும் இருந்துள்ளார். இவர் திகாமடுல்ல வேட்பாளர் கதிர்காமத்தம்பியின் ஆதரவாளர் என அமைச்சருக்கு அறிமுகம் செய்யப்பட்டதாகவும் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அமைச்சரோடு பொலீஸ் மைதானம் வரை சென்ற வாகனச் சாரதிகள் மூலமே இந்த இளைஞர் பற்றி தெரியவந்துள்ளது. ஹெலிகொப்டரில் ஏறுவதற்கு முன்பாக யாரும் தனிப்பட்ட சோதனைகளுக்கு உட்படுத்தப்படவில்லை. அமைச்சருடன் வந்தவர்கள் என்பதாலும், தனிப்பட்ட பயணத்துக்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஹெலிகொப்டர் என்பதாலும் இத்தகைய சோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சரின் சாரதிகளும், அவரோடு பயணம் செய்யாத பாதுகாப்பு அதிகாரிகள் சிலரும் இந்த சந்தேகத்துக்குரிய இளைஞரைப் பற்றி புலனாய்வுத் துறையினருக்கு தெரிவித்துள்ள போதிலும், ஹெலிகொப்டரில் பயணம் செய்தவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்று இல்லாததால் இவர் யாரெனத் தெரிந்து கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். இது தவிர சம்பவம் நடந்த இடத்திலிருந்து 13 சடலங்களே இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

### இளைஞரின் சடலமா?

ஆனால் 14 பேர் பயணம் செய்ததாகத் தெரியவந்துள்ளது. ஒரு சடலம் முற்றாகச் சிதைவுற்று இருக்கலாமா என்ற சந்தேகமும், அது மேற்படி இளைஞருடைய சடலமா என்பதும் விசாரணையாளர்களைக் குழப்பியிருக்கும் மற்றொரு விடயமாகும் என்று கூறப்படுகிறது.

அமைச்சர் அஷ்ரப் வெள்ளிக்கிழமை மாலையே பயணம் செய்யவிருந்தார். ஆனால் தவிர்க்க முடியாத காரணங்களால் இது சனிக்கிழமை காலை வரை பிற்போடப்பட்டது.

சந்தேகத்துக்குரிய இளைஞர் வெள்ளிக்கிழமை மாலை கதிர்காமத்தம்பியுடன் அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு வந்துள்ளார். அவர் கதிர்காமத்தம்பியுடன் வந்ததால் அவரிடம் இருந்த பயணப்பை சோதனையிடப்படவில்லையென்றும் அமைச்சர் அஷ்ரப்பின் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### பயணப்பையுடன் வந்தார்

வெள்ளிக்கிழமை இரவு இந்த சந்தேகத்துக்குரிய நபர் அமைச்சரின் இல்லத்திலுள்ள சாரதிகள் தங்குமிடத்தில் தங்கியுள்ளார். இவர் தனது பயணப்பையை தனக்கு மிகவும் சமீபமாக வைத்துக்கொண்டிருந்ததை அவதானித்ததாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் அஷ்ரப் சனிக்கிழமை காலை வாகனத்தில் ஏறும்போது இந்த இளைஞரைக் கண்டுள்ளார். "யார் இந்தப் புதிய நபர்?" என அமைச்சர் உடனே அருகிலுள்ளவர்களைக் கேட்டுள்ளார்.

"அவர் கதிர்காமத்தம்பியோடு வந்தவர்" என அமைச்சருக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரச சார்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

## கறுப்புப் பெட்டி, உரைநாடா எதுவுமே மீட்கப்படவில்லை!

### விசாரணைக்குழு திரும்பியது

கொழும்பு,செப்.20

அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் உட்பட 14 பேரின் மரணத்துக்குக் காரணமான ஹெலிகொப்டரின் கறுப்புப் பெட்டியோ அல்லது உரைகளைப் பதிவு செய்யும் நாடாவோ கண்டு பிடிக்கப்படவில்லையென்று விமானப் படை உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஹெலிகொப்டர் விபத்து சம்பந்தமாக விசாரணைகளை நடத்திய விமானப்படை குழு நேற்றுமுன் தினம் காலை கொழும்பு திரும்பியது.

இக்குழு விசாரணை சம்பந்தமான ஆரம்ப அறிக்கையை விமானப் படைத்தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கு கையளிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக விமானப்படை அதிகாரி விங் கொமாண்டர் விஜேசுந்தர கூறியுள்ளார்.

அமைச்சர் அஷ்ரப் மற்றும் 13 பேரை ஏற்றிச் சென்ற 'எம்.ஐ.17 ரக' ஹெலிகொப்டர் கடந்த சனிக்கிழமை கேகாலை அரநாயக்கா காட்டுப் பகுதிக்குள் விபத்துக்குள்ளானது.

அமைச்சர் பயணம் செய்த இந்த ஹெலிகொப்டர் விபத்துக்கு குண்டுவெடிப்புத்தான் காரணம் என்று கூறப்படும் தகவல்கள் பற்றி இப்பொழுது எதனையும் திட்டவட்டமாகக் கூறமுடியாது. இதற்கான காத்திரமான தடயங்கள் இருப்பதாகத் தெரியவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இருந்த போதிலும் விசாரணை நடத்திவரும் குழுவினருக்குக் கிடைத்துள்ள தடயங்கள், தகவல்கள் அடிப்படையில் இந்த விபத்துக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிய விசாரணைக் குழுவினர் முயன்று வருகின்றனரென்றும் அவர் கூறியுள்ளார்.

ஹெலிகொப்டரின் கறுப்புப் பெட்டி அல்லது உரைநாடா பதிவுப் பெட்டி ஏன் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அவரிடம் கேட்ட போது - "இது தொடர்பான முயற்சி தொடருகின்றது. இத்தகைய சாதாரண ஹெலிகொப்டரில் இது மிகப் பாதுகாப்பானதாக இருக்காது" என்றும் அவர் கூறியதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ-4)

## அணுசக்தி மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகள்

கொழும்பு,செப்.20

ஆஸ்திரியத் தலைநகரான வியன்னாவில் நடைபெறும் சர்வதேச அணுசக்தி அதிகார முகவர் நிலைய 44ஆவது மாநாட்டில் இலங்கையில் இருந்து விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைச்சுச் செயலாளர் என். பத்மநாதன் தலைமையிலான குழுவினர் கலந்துகொள்கின்றனர்.

இலங்கை அணுசக்தி அதிகார சபைத் தவிசாளர் கலாநிதி எம். பிரினாத் டயஸ், அணுசக்தி அதிகார சபைக் கூட்டுறவுப் பிரிவுத் தலைவர் எச்.ஜி.வி.கருணாரத்ன, வியன்னாவின் இலங்கைத் தூதரக இரண்டாவது செயலாளர் திருமதி எச்.எம்.சி.ஆர்.கே.விஜேரத்ன மென்டிஸ், வியன்னாவின் இலங்கைத் தூதரக பிரதிநிதி பியசிறி லொகு கலபத்தி ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். (ஐ-4)

**நாளை**
**புரட்டாதி 5**
**வியாழக்கிழமை**
*திதி:* அட்டமி
பிற்பகல் 4.45 வரை
*நட்சத்திரம்:* மிருகசீரிடம்
முற்பகல் 10.17 வரை
*சுபநேரம்:* 7.32 - 9.02
*ராகுகாலம்:* 1.32 - 3.02
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

**எத்தனை முறை துலக்கினாலும் பித்தளையின் குணம் மாறாது. அதுபோல வாழ்க்கையில் சிலருக்கு எத்தனை முறை நற்புத்தி புகட்டினாலும் அவர்களின் துர்க்குணம் மாறுவதில்லை.** - *பங்*

## வேட்பாளருக்கு வழங்கப்பட்ட இலக்கங்களின் விவரம்

கொழும்பு,செப்.20

பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களின் பெயர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட இலக்கங்களும் உதயனில் வெளியிடப்பட்டு வருவது தெரிந்ததே.

அந்த வகையில் 12 அரசியல் கட்சிகளின் விவரங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தன. கீழே மேலும் 2 அரசியல் கட்சிகளினதும் 3 சுயேச்சைக் குழுக்களினதும் விவரங்கள் தரப்பட்டுள்ளன:-

### சிஹல உறுமய

சின்னம் - வில்லும் அம்பும்

| | வேட்பாளரின் பெயர் | இலக்கம் |
|---|---|---|
| ★ | அப்பு ஹென்னதிலே அமரபால | 1 |
| ★ | உபுல் டி அல்விஸ் குணவர்த்தன | 2 |
| ★ | கம்புறு கமுவ லொக்கு ஆச்சாரிகே பாலித்த விக்கிரமரத்ன | 3 |
| ★ | தறங்க வகசெனவி | 4 |
| ★ | நிமேஸ் பண்டார உயன்கொட | 5 |
| ★ | மாக்கவிற்றகே வீரசிங்க | 6 |
| ★ | மாலிந்தசன்ன பீரிஸ் செனவிரத்ன | 7 |
| ★ | மாவனாகே கேவா சஹறன் பிரசன்ன டி சில்வா | 8 |
| ★ | றணவக்க ஆச்சிகே மகிந்த சரத் சந்திர | 9 |
| ★ | சிறீபால கெற்றி ஆராச்சிகே | 10 |
| ★ | சேபால குணசேகர | 11 |
| ★ | ஹேவா பெபெலெத்தகே றூவன் எறந்த | 12 |

### சிங்ஹளயே மஹசம்மத பூமிபுத்திரக் கட்சி

சின்னம் - விமானம்

| | | |
|---|---|---|
| ★ | அஜந்தா றோஹினி விஜயக்கோன் | 1 |
| ★ | ஆர்.பீ.சுமதிவர்த்தன | 2 |
| ★ | ஈ.ஏ.டி.ஜயந்தி மாலதி | 3 |
| ★ | உதயலால் ராஜபக்ச | 4 |
| ★ | உயன ஹேவகே புத்ததாச | 5 |
| ★ | என்.ஜி.எஸ்.மானெல | 6 |
| ★ | கே.பிரசன்ன பிரதீப் குமார | 7 |
| ★ | துசித்த பிரசன்ன பத்திரன | 8 |
| ★ | பி.டி. பேனாட் ஜினேந்திர | 9 |
| ★ | மகிந்த ஜயசேகர | 10 |
| ★ | வியனாராச்சிகே அபேவிக்கிரம | 11 |
| ★ | சுஜித்குமார ஜான்ஸ் | 12 |

### சுயேச்சை - 1

(ஈ.பி.ஆர்.எல்.எவ். - சுரேஸ் அணி)

சின்னம் - தோடம்பழம்

| | | |
|---|---|---|
| ★ | அன்னலிங்கம் உதயகுமார் | 1 |
| ★ | அமிர்தலிங்கம் திருச்செல்வம் | 2 |
| ★ | ஆசீர்வாதம் அன்ரன் ஜெயபாலா | 3 |
| ★ | கதிரவேலு பாலரஞ்சன் | 4 |
| ★ | தம்பிப்பிள்ளை நித்தியானந்தம் | 5 |
| ★ | தம்பு தவதீபன் | 6 |
| ★ | தர்மராஜா வில்சன் | 7 |
| ★ | நடராஜா அலெக்ஸ்சாண்டர் ஜெயக்கொடி | 8 |
| ★ | பரஞ்சோதி உருத்திரமூர்த்தி | 9 |
| ★ | பசுபதி சீவரத்தினம் | 10 |
| ★ | சத்தியசீலன் ஞானசீலன் | 11 |
| ★ | சுப்பிரமணியம் தங்கேஸ்வரன் | 12 |

### சுயேச்சை - 2

(ஈ.பி.ஆர்.எல்.எவ். - வரதர் அணி)

சின்னம் - மீன்

| | | |
|---|---|---|
| ★ | அண்ணாமலை வரதராஜப்பெருமாள் | 1 |
| ★ | கந்தையா சிவராஜா | 2 |
| ★ | தம்பிராஜா சுபத்திரன் | 3 |
| ★ | திருநாவுக்கரசு சிறீதரன் | 4 |
| ★ | நாகலிங்கம் இராசேந்திரம் இராமேஸ்வரன் | 5 |
| ★ | நீக்கிலாப்பிள்ளை மருசலீன் | 6 |
| ★ | மனுவல் மங்களநேசன் | 7 |
| ★ | முருகையா மனோரஞ்சன் | 8 |
| ★ | இரத்தினம் சர்வலோகநாதன் | 9 |
| ★ | வயிரமுத்து விக்னேஸ்வரன் | 10 |
| ★ | வல்லி சுந்தரம் | 11 |
| ★ | செல்லையா சுந்தரமூர்த்தி | 12 |

### சுயேச்சை - 3

(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி)

சின்னம் - தொலைபேசி

| | | |
|---|---|---|
| ★ | அப்துல் அலி சுல்த்தான் மொஹிடீன் | 1 |
| ★ | ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி | 2 |
| ★ | கதிர்காமநாதர் ஜெயக்குமார் | 3 |
| ★ | கனகசிங்கம் செல்வராஜா | 4 |
| ★ | கிருஷ்ணசாமி முத்துக்குமார் | 5 |
| ★ | ஜயந்தி பரமலிங்கம் | 6 |
| ★ | தங்கராஜா தேவகுலநாயகம் | 7 |
| ★ | தாமோதரம்பிள்ளை சண்முகநாதன் | 8 |
| ★ | மார்க்கண்டு துரைராஜா | 9 |
| ★ | முருகேசு அற்புதராஜா | 10 |
| ★ | வேல்முருகு தங்கராஜா | 11 |
| ★ | சின்னையா சிவஞானம் | 12 |

(ஐ-9)

# ஒற்றுமையை வலியுறுத்தும் ஒலிம்பிக் போ

சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் கடந்த 15ஆம் திகதி ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளன. 1896ஆம் ஆண்டு நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் 27ஆவது ஒலிம்பிக் போட்டி இதுவாகும். இருபத்தோராம் நூற்றாண்டின் முதலாவது ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் சந்தர்ப்பம் சிட்னி நகருக்குக் கிடைத்திருக்கின்றது. நூற்றுக்கணக்கான நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றனர். தகுதிகாண் போட்டிகளில் வெற்றி




நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பித்து 100 ஆண்டுகள் நிறைவடைந்ததையிட்டு அமைக்கப்பட்ட சின்னம்.

பெற்று, இறுதிப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றிப்பதக்கங்களை அள்ளி எடுக்க அவர்கள் ஆவலோடு காத்திருக்கும் இவ்வேளையில் ஒலிம்பிக் போட்டிகளின் வரலாற்றினைச் சற்றுப் பின்னோக்கிச் சென்று பார்ப்போம்.

## தோற்றமும் வளர்ச்சியும்

புராதன கிரேக்க(கிரீஸ்) தேசத்தில் தான் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின. உலக விளையாட்டு அரங்கிற்கு கிரேக்க தேச மக்களால் வழங்கப்பட்ட உன்னதப்பரிசாக ஒலிம்பிக் போட்டிகள் கருதப்படுகின்றன.

ஒலிம்பியா நகரில் இருந்த பிர மாண்டமான மைதானத்தில் நடைபெற்று வந்ததாலேயே இப்போட்டிகளுக்கு 'ஒலிம்பிக்ஸ்' என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது! கி.மு. 728வரை - அதாவது 13ஆவது ஒலிம்பிக் போட்டிகள் வரை - போட்டிகள் ஒரேயொரு தினத்தில் மட்டுமே நடத்திமுடிக்கப்பட்டன. படிப்படியாக புதிய விளையாட்டுகள் இணைக்கப்பட்டு போட்டிகள் நடைபெறும் நாள்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டன. 14ஆவது ஒலிம்பிக்கில் அரை மைல் தூர ஓட்டமும், 15ஆவது ஒலிம்பிக்கில் இரண்டரை மைல் தூர ஓட்டமும் இணைத்துக் கொள்ளப்பட்டன.


குத்துச் சண்டைப் போட்டிகள் 23ஆவது ஒலிம்பிக்கிலிருந்தும், குதிரையேற்றப்போட்டிகள் 25ஆவது ஒலிம்பிக் முதலும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. தடகள விளையாட்டுக்களுக்கு 25 ஆவது ஒலிம்பிக்கில் இருந்து தான் முன்னுரிமை கொடுக்கப்பட்டது. 33ஆவது ஒலிம்பிக் போட்டிகளில்தான் குண்டெறிதல், தட்டெறிதல் போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டன.

## வீழ்ச்சியும் எழுச்சியும்

ரோம சாம்ராஜ்ஜியத்தின் சக்கரவர்த்தியாகத் திகழ்த நீரோ மன்னன் ஒலிம்பிக் போட்டிகளில் பல முட்டாள்தனமான விதிமுறைகளைப் புகுத்தினான். இவ்விதிமுறைகள் எத்தியோஸ் மன்னன் காலம் வரை தொடர்ந்தன. கி.பி. 394இல் ரோமை ஆட்சி செய்த தியோடோஷயஸ் மன்னர் ஒலிம்பிக் போட்டிகளைத் தடைசெய்தார். கி.பி.393ஆம் ஆண்டில் நடைபெற்ற 293ஆவது போட்டியுடன் புராதன ஒலிம்பிக்கின் சரித்திரம் நிறைவுபெற்றது.

ஒலிம்பிக் போட்டிகளை மறுபடியும் ஆரம்பிப்பதற்காக கிரேக்கர்கள் மேற்கொண்ட முயற்சிகள் கைகூடவில்லை. இறுதியில் பிரெஞ்சு தேசத்தைச் சேர்ந்த குபெர்தி என்பவரின் விடாமுயற்சியினால் 1896ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி திங்கட்கிழமை அன்று கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் புதிய ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின. இப்போட்டியில் 13நாடுகளைச் சேர்ந்த 311 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றினர். இடையில் ஏற்பட்ட முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்கள் காரணமாக ஒலிம்பிக் போட்டிகள் தடைப்பட்டன உலக யுத்தங்கள் ஓய்ந்து - மக்கள் ஓரளவுக்கேனும் அமைதிக்கு மீண்டு - நாடுகளின் பொருளாதாரங்கள் வளர்ச்சியடையத் தொடங்கிய வேளையில் மீண்டும் புத்துயிர் பெற்ற ஒலிம்பிக் போட்டிகளைச் சீராக-ஒழுங்கான முறையில் நடத்துவதற்காகச் சர்வதேச ஒலிம்பிக்சபை (**International Olympics Committee - IOC**) நிறுவப்பட்டது. இச்சபைதான் இன்றும் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை ஒலிம்பிக் போட்டிகளைத் திறம்பட நடத்தி வருகின்றது. இச்சபையில் 167 நாடுகள் இணைந்துள்ளன. இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்திலுள்ள லோஸ்ணரில் அமைந்துள்ளது.

நவீன ஒலிம்பிக் போட்டிகள் பல வரையறைகளுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டே நடைபெற்று வருகின்றன. பாரம்பரியமான கோட்பாடுகளும் குறிக்கோள்களும் பிரதானமானவையாகக் கருதப்படுகின்றன. ஒலிம்பிக் போட்டிகளின் சின்னம், குறிக்கோள்,சத்தியப்பிரமாணம் போன்ற அடிப்படை அம்சங்களைப் பற்றி சிறிது பார்ப்போம்.



பாரிஸில் 1914இல் தான் ஒலிம்பிக் கொடி உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒலிம்பிக் கொடி ஏற்றிவைப்பதற்காக மைதானத்தைச் சுற்றி கொண்டுவரப்படும் காட்சி.

## ஒலிம்பிக் சின்னம்

ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பொதுவான சின்னமாக உலகில் அனைத்து மக்களினதும் விளையாட்டு நட்புறவைக் குறிக்கும் வகையில் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்ட ஐந்து வளையங்கள் அமைந்துள்ளன இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறமானவை. நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு ஆகிய நிறங்களைக் கொண்ட இந்த ஐந்து வளையங்களும் உலகின் ஐந்து கண்டங்களையும் குறிக்கின்றன.

## ஒலிம்பிக் கொடி

வெள்ளைப் பின்னணியில் ஒலிம்பிக் சின்னம் பொறிக்கப்பட்டதாக ஒலிம்பிக்கொடி அமைந்துள்ளது.

## குறிக்கோள்


சிடியுஸ், அல்டியுஸ், போர்டியிஸ் என்னும் மூன்று கிரேக்க வார்த்தைகளும் ஒலிம்பிக்கின் குறிக் கோளை உணர்த்துகின்றன. முன்னர் இவற்றுக்கு முறையே வேகம், உயரம், துணிச்சல் என்றும் தற்போது முறையே பறத்தல், உயரம், வலிமை என்றும் பொருள் கொள்கின்றார்கள். இக்



ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெறுவதை வி
பங்குபற்றுவதே முக்கியமானது எனினும் துறைக்குவ
களில் வெற்றியைத் தேடிக்கொள்ள வீரர்கள் முய
வது காலம் காலமாக நடந்துதான் வருகிறது.

### கடந்த ஒலிம்பிக்கில்...

1996 ஆம் ஆண்டில் 26 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் அட்லாண்டா நகரில் நடைபெற்றன. இதில் 197 நாடுகளைச் சேர்ந்த 10 ஆயிரம் போட்டியாளர்களும் பயிற்சியாளர்களும் அலுவலர்களுமாக 5 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர். ஒலிம்பிக் போட்டிகள் பற்றிய செய்திகளை உடனுக்குடன் உலகத்துக்குத் தெரியப்படுத்தும் முகமாக 15 ஆயிரத்துக்கும் அதிகமான செய்தியாளர்கள் அட்லாண்டா நகரில் தங்கியிருந்தனர். 27 வகையான விளையாட்டுக்களின் கீழ் 271 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றிபெற்றவர்களுக்கு மொத்தமாக 604 தங்கம், 604 வெள்ளி, 630 வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.



அட்லாண்டாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளுக்காக அமெரிக்க நாட்டின் ஒலிம்பிக் சபையினரால் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட ஒலிம்பிக் சின்னம் 'இஸ்ஸி' (IZZY).

### சிட்னி 2000

இப்போது ஒலிம்பிக் போட்டிகளை நடத்திக் கொண்டிருக்கும் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகருக்கு இவ்வாய்ப்பு இலகுவாகக் கிட்டிவிடவில்லை. 21 ஆம் நூற்றாண்டின் முதலாவது ஒலிம்பிக் போட்டி இது என்பதால் இதனை நடத்துவதற்கு சீனா, பிரிட்டன் உட்படப் பல நாடுகள் போட்டியிட்டன.

போட்டிகளை நடத்தும் சந்தர்ப்பத்தை எந்த நாட்டுக்கு வழங்குவது என்பதைத் தீர்மானிப்பதற்காக IOC ஆய்வாளர்கள் பல நாடுகளுக்கும் சென்று பார்வையிட்டனர். ஒலிம்பிக் போட்டியை நடத்தும் சந்தர்ப்பம் தமக்குத் தான் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் பல நாடுகள் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான தயாரிப்பு வேலைகளில் ஈடுபட ஆரம்பித்தன. பிரிட்டனில் மான்செஸ்டர் நகரில் இரண்டு பிரம்மாண்டமான ஒலிம்பிக் ஸ்ரேடியங்களை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவிலும் சிட்னி நகரம் ஒலிம்பிக் போட்டிகளுக்காகப் பெருமெடுப்பில் தயாராகிவந்தது. சிட்னி நகர மக்கள் தமது நகரின் தூய்மையைப் பேணுவதில் அதிதீவிர அக்கறை காட்டினார்கள்.

சிட்னி நகர விடுகளின் வெளியே ஈரமான ஆடைகளைக் காயப்போடுவதற்கு சிட்னி நகரசபை தடை விதித்தது. நகரின் அழகு இதனால் கெட்டுவிடும் என்றும், துணிகளைக் காயவைக்கக்கூட இயந்திரம் இல்லாத ஏழைகள் நிறைந்த நகரம் இது என்றும் நினைத்து ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பைத் தமக்கு தராமல் போய்விடலாம் என்றும் சிட்னி அரசு கருதியது. சிட்னி நகர மக்களின் உழைப்புக்குத் தக்க பலன் கிடைத்தது. 27ஆவது ஒலிம்பிக் போட்டிகளை நடத்த எந்த நகருக்குச் சந்தர்ப்பம் வழங்குவது என்பதைத் தீர்மானிக்க IOC நடத்திய வாக்கெடுப்பில் சீனாவின் பீகிங் நகரை விட இரண்டு வாக்குகளை அதிகமாகப் பெற்று சிட்னி நகரம் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது.

உலகிலேயே மிக அழகிய கடற்கரையைக் கொண்ட சிட்னி நகர் முழுவதற்கும் சூரிய சக்தியால் தடையின்றி மின்சாரம் பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிட்னி ஒலிம்பிக்கில் 28 வகையான விளையாட்டுப் போட்டிகளில் 300 தங்கப்பதக்கங்கள் உட்பட மொத்தமாக 1000 பதக்கங்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதல் முறையாக வெற்றி பெறும் விளையாட்டு வீர, வீராங்கனைகளின் பெயர்கள் பதக்கங்களில் பொறிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

199 நாடுகளைச் சேர்ந்த 11 ஆயிரத்துக்கும் அதிகமான விளையாட்டு வீர, வீராங்கனைகள் பங்குபற்றும் சிட்னி ஒலிம்பிக் போட்டிகள் 17 நாள்களில் நடத்தி முடிக்கப்படவுள்ளன.

1956 இல் 16 ஆவது நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் நடைபெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் நேற்றைய நிலவரப்படி பதக்கப்பட்டியலில் அமெரிக்கா 6தங்கம், 5வெள்ளி, 2வெண்கலப்பதக்கங்களுடன் முதலாம் இடத்திலும், பிரான்ஸ் 4தங்கம், 6வெள்ளி, 2வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாம் இடத்தில் உள்ளன. ஆஸ்திரேலியா, சீனா ஆகிநாடுகளும் பதக்கங்களை வென்றெடுத்த நாடுகளில் முன்னிலையில் உள்ளன.

குறிக்கோள் வார்த்தைகளை 1895இல் பிரெஞ்சு கல்வியியலாளரான வண.பிதா டைடோன் என்பவர் உருவாக்கினார்.

### கோட்பாடு

ஒலிம்பிக்கில் முக்கியமானது விளையாட்டில் பங்குபற்றுவது தானே தவிர வெற்றி பெறுவது அல்ல என்பதே முக்கிய கோட்பாடாகத் திகழ்கின்றது. வெற்றிக்காக நல்ல விதமாகப் போராடுவதே போற்றப்படும்.

### சத்தியப்பிரமாணம்

இதனை ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் நாட்டைச் சேர்ந்த ஒரு விளையாட்டு வீரர் போட்டிகளின் ஆரம்ப நாளன்று வாசிப்பார். இது ஒவ்வொரு வீரரினதும் சத்திய வாக்காக எடுத்துக் கொள்ளப்படும்.

'ஒலிம்பிக் விளையாட்டுக்களின் சட்ட திட்டங்களை மதிப்பதற்காகவும் விளையாட்டுக்களின் மேன்மைக்காகவும் அணியின் சிறப்புக்காகவும் உண்மையான விளையாட்டு உணர்வுடன செயற்படுவதற்காகவும் நாங்கள் இந்த ஒலிம்பிக்கில் கலந்து கொள்கின்றோம் என்பதை அனைத்து வீரர்களின் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்' என்றவாறாக அமைந்த சத்தியப்பிரமாணத்தை அமைத்தவர் நவீன விளையாட்டுக்களின் கண்டுபிடிப்பாளரான பியர் ரே டி கௌபெர்டின் ஆவார்.

### ஒலிம்பிக் தீபம்

பழங்கால விளையாட்டுக்களுக்கும் தற்கால விளையாட்டுக்களுக்கும் இடையேயான தொடர்பை ஒலிம்பிக் தீபம் உணர்த்துகின்றது. ஒலிம்பிக் ஜோதி குறித்த நவீன விளக்கம் 1936இல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒலிம்பிக் ஜோதியை உருவாக்குவதற்கான தீப்பந்தம் கிரீஸ் நாட்டிலுள்ள ஒலிம்பியாவில் சூரியக்கிரணங்களால் பற்ற வைக்கப்பட்டு, ஒலிம்பிக் நடைபெறும் நாட்டுக்குப் பல தொடர் ஓட்டக்காரர்களால் கொண்டு செல்லப்படும். அவசியம் ஏற்படின் கப்பல்களும் விமானங்களும் பயன்படுத்தப்படும்.

மேற்கூறிய கோட்பாடுகள், குறிக் கோள்கள் போன்றவற்றை பெரும்பாலான விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மதித்து, அவற்றுக்குக் கட்டுப்பட்டு நேர்மையான முறையில் போட்டிகளில் பங்குபற்றினாலும் குறுக்கு வழிகளில் வெற்றிகளைத் தேடிக் கொள்ள முயல்பவர்களும் இல்லாமல் இல்லை.

# ...ட்டிகள்

போதை மருந்துகள், உற்சாக மூட்டும் மருந்து வகைகள் போன்றவற்றை உபயோகித்து அதீத ஆற்றலைப் பெற்றுக் கொண்டு போட்டிகளில் பங்கு பெறச் சிலர் முயற்சி செய்வதுண்டு. இப்படியான முறைகேடுகளைக் கண்டு பிடிக்க போட்டிகளில் பங்குபற்றும் அனைத்துப் போட்டியாளர்களும் பல சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். முறைகேடாக நடக்க முயல்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படும். எனினும் பரிசோதனைகளின்போது கூட கண்டுபிடிக்க முடியாத உற்சாக மருந்து வகைகள் தற்போது உற்பத்திசெய்யப்பட்டிருப்பதால தில்லுமுல்லுகளைத் தடுக்க ஒலிம்பிக் சபை மிகப் பிரயத்தனப் பட வேண்டியுள்ளது.

### சாதனை வீரர்



**Ray Ewry (ரே எவ்றி) 1873 ஒக்டோபர் 18 ஆம் திகதி Lafayatte (Indiana) இல் பிறந்தார். சிறுவயதிலேயே போலியோ வியாதியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டார். எனினும் சக்கர நாற்காலியோடு தனது வாழ்வை முடக்கிக் கொள்ள இவர் விரும்பவில்லை. கடுமையான பயிற்சிகளை இடைவிடாது மேற்கொண்டு ஊனமுற்ற தனது கால்களுக்குப் படிப்படியாக வலுவை ஊட்டினார். அவரது விடாமுயற்சிக்குத் தக்க பலன் கிடைத்தது. சிறந்த தடகள வீரரானார். 1900 முதல் 1908 வரையான காலப் பகுதியில் நடைபெற்ற மூன்று ஒலிம்பிக் போட்டிகளிலும் பங்குபற்றக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு மொத்தமாக 8 தங்கப் பதக்கங்களைப் பெற்று, நீளந் தாண்டுதலில் உலக சாதனையும் படைத்து தன் நாட்டுக்குப் பெருமை சேர்த்தார். விடா முயற்சி தக்க பலனைத் தரும் என்பதற்கு எவ்றி இன் ஒலிம்பிக் வெற்றிகள் தக்க சான்று!**


### விசிறி

புதிய மிலேனியத்தின் முதலாவது ஒலிம்பிக் போட்டிகளை நடத்திக் கொண்டிருக்கும் சிட்னி நகர் எப்போதோ விழாக்கோலம் பூண்டு விட்டது. உலகெங்கிலும் இருந்தும் வந்து குவியும் போட்டியாளர்களையும், பார்வையாளர்களையும் சிறப்பாக வரவேற்று உபசரிக்கின்றனர் சிட்னி நகர மக்கள். விளையாட்டு வீரர்களுக்காகப் பெருந்தொகையான பணத்தைச் செலவிடுவதற்கு சிட்னி நகர அரசு ஏற்பாடு செய்துள்ளது. வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வாண வேடிக்கைகளோடு சிட்னி நகர் உலகையே தன் பக்கம் ஈர்த்துக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் போட்டிகளில் பங்கேற்கப் போகும் அனைத்துப் போட்டியாளர்களுக்கும் நாமும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்!



# இலக்கண வித்தகரின் இனிய நினைவுகள்...

**அண்மையில் இந்தியாவில் காலமான இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகரின் நினைவாக அவரது மாணவர்களில் ஒருவர் வரைந்த கட்டுரை இது. பல துறைகளில் வித்தகராய் விளங்கிய நமசிவாய தேசிகரின் கல்விப் போதனை குறித்து தமது இனிய நினைவுகளை மீட்டுப் பார்க்கிறார் கட்டுரையாளர். இலக்கண வித்தகரின் இறுதிச் சடங்குகள் இன்று இந்தியாவில் நடைபெறுகின்றன.**



'இலக்கண வித்தகர்' 'தேசிகர்' முதலான பலபட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பண்டிதர் இ.நமசிவாயம் அவர்கள் கல்வி புகட்டிய வீமன்காமம் மகாவித்தியாலயம் எனப்பின்னால் பெயர் மாற்றம் செய்யப்பட்ட வீமன்காமம் ஆங்கிலப் பாடசாலையில், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு வரையில் கல்விபயிலும் வாய்ப்பைப் பெற்று, அதன் பயனாக அவரிடம் தமிழ், சமயம் ஆகியவற்றை ஐயந்திரிபறக் கற்கும் வாய்ப்பைப் பெற்ற மாணாக்கர்களில் யானும் ஒருவன். இதற்காகப் பெருமையடையும் அதேவேளையில், பண்டிதர் ஐயா அவர்களுடனான சில இனிய நினைவுகளை வாசகப் பேரறிஞர்களுடன் பகிர்ந்து கொள்ளும் அவாவினால் உந்தப் பெற்று, இக்கட்டுரையை வரைகின்றேன்.

தமிழ் இலக்கணத்திலும், இலக்கியத்திலும், உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்கூறும் நல்லுலகு எங்கணும் ஒப்பாரும் மிக்காரும் அற்றவராக, அகவை எண்பத்தைந்து வரை திகழ்ந்த ஐயா அவர்கள், ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் பாடசாலை மாணாக்கர்களின் மதிப்புக்குரியவராகத் திகழ்ந்த ஒரு பேராசான். மாணாக்கர்களிடம் இனிய சுபாவத்துடன் பழகும் அதே நேரத்தில், அவசியமான போது கண்டிப்புடனும் நடந்து கொள்வார். இதனால் எமக்கு அவரிடம் ஒரு பக்தியும் இருந்து வந்தது.

மாவைக் கந்தன் ஆலயத்தில் கொடித்தம்பத்திற்கு கிழக்குப்புறமாக அமைந்துள்ள கிராமம் 'பழை' என அழைக்கப்படுகிறது. ஆலயத்தின் கிழக்கு வாயிலிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் வீதியில், ஆலயத்திலிருந்து சுமார் 300மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது வீமன்காமம் ஆங்கில பாடசாலை. இது ஆரம்பத்தில் 'வீமன்காமம்' என்ற இடத்தில் இயங்கிப் பின்னர் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டதனால் பழைய பெயருடனேயே இயங்கியது.

தமது இளம்பராயம் முதல் ஓய்வு பெறும் வரை பண்டிதர் ஐயா அவர்கள் இப்பாடசாலையிலேயே ஆசிரியராகவும் உபஅதிபராகவும் பணிபுரிந்தார். இவர் தமது ஆசிரியப் பணியில் கண்டிப்பும் கடமையுணர்வும் ஒருங்கே உடையவராக இருந்தார். பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்பே சமுகமளித்துவிடுவார். அரசாங்கம் ஆண்டுதோறும் விடுமுறைபெற வசதிசெய்து கொடுத்த போதும், ஐயா அதனைப் பயன்படுத்தியது அரிதிலும் அரிது. இதற்கு மாறாக, அரசாங்கப் பரீட்சை நெருங்கும் காலங்களில் சனி, ஞாயிறு தினங்களிலும் வந்து கற்பிப்பார்.

வாழ்க்கை நெறியில் தமக்கென ஒரு கொள்கையை வகுத்து அதன்படி ஒழுகினார். கால்களுக்குக் காலணி அணிவது கிடையாது. வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்துவதும் இல்லை. பாடசாலைக்குப் பணிபுரிய வரும் நேரம் தவிர மேலங்கி அணிவதில்லை. ஒரு சால்வை எப்போதும் தோள்களை அலங்கரிக்கும். வேட்டி மட்டுமே அணிவார். நெற்றியைத் திருநீறும் சந்தனப்பொட்டும் எப்போதும் அலங்கரிக்கும். இன்றைக்கும் எமது அகக்கண்களுக்குள் வியாபித்திருக்கும் ஐயா அவர்களின் தோற்றம் இதுவேயாகும்!.

தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், இந்து சமயம் ஆகிய பாடங்களை உயர் வகுப்புகளுக்குக் கற்பித்து வந்தார். வகுப்பு நடக்கும் நேரங்களில் மாணவர்களிடம் மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடப்பார். ஏனைய சில ஆசிரியர்களைப் போல பிரம்பு கொணர்ந்து அடிப்பது கிடையாது. ஆனால் மாணவர்கள் இவரிடம் ஒருவித பயபக்தியுடன் பழகுவர். வகுப்புகள் இல்லாத நேரங்களில் மாணவர்களுடன் இனிய சுபாவத்துடன் பழகுவார். சிரேஷ்ட பாடசாலைத் தராதரப பத்திர வகுப்பில் இலக்கியத்தில் உள்ள பாடல்களை மனனம் செய்ய வேண்டும் என்பது இவருடைய அறிவுறுத்தல். மனனம் செய்தாற்தான் இணைந்து காணப்படும் சில சொற்பதங்களின் கருத்துக்களை எளிதாக அறிய முடியும் என்பார். ஆனால் இவருடைய கற்பிக்கும் திறனால், அப்பாடல்களுக்கென நேரம் ஒதுக்கி மனனம் செய்ய வேண்டிய அவசியம் எமக்கு ஏற்படவில்லை.

சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பிற்கு, கம்பராமாயணத்தில் கும்பகர்ணன் வதைப்படலம் இலக்கிய பாடமாக இருந்தது. ஒவ்வொரு வகுப்பிலும் இருபாடல்களை எடுத்தாழுவார். முதலில் பாடலை இராகத்துடன் படிப்பார். பின்பு சில மாணவர்களை அப்பாடலை வாசிக்கும்படி கூறுவார். பின்பு சொற்பதங்களை எப்படிப்பிரிக்க வேண்டும் என விளக்கி பாடல் வரிகளுக்குக் கருத்துரை வழங்குவார். பின்பும் ஒரு முறை பாடலைப் படிப்பார். இப்போது அப்பாடல் எமக்கு மனனமாகி விடும். கம்பராமாயணத்தின் பாடல்கள் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி வீரம், துக்கம், சாந்தம் முதலானவற்றை வெளிப்படுத்துபவையாக அமைந்துள்ளன. அதற்கேற்ற இராகங்களில் படிப்பதனால் எமது மனதில் இலேசாகப் பதிந்துவிடும்.

அவருடைய கண்டிப்பை வெளிப்படுத்தும் ஒருநிகழ்வு இன்றும் பசுமையாக உள்ளது. 1957ஆம் ஆண்டு சி.ய.த.பபரீட்சைக்கு நாம் தோற்றவேண்டும். முன்பு கூறியது போல தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், இந்து சமயம் ஆகிய பாடங்கள் ஐயாவுடையவை. பரீட்சை டிசெம்பரில் நடைபெறும். அதற்கு முன்பாகப் பாடசாலை நிர்வாகத்தினர் ஒரு தகுதிகாண் பரீட்சையை ஒக்ரோபரில் நடத்துவது வழக்கம். இப்பரீட்சையில் போதிய திறமை காட்டாதவர்கள் அரசாங்கப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். பரீட்சைத்திணைக்களத் திடமிருந்து அவர்களின் விண்ணப்பம் திரும்பப் பெறப்படும்.

எமக்கு தகுதிகாண் பரீட்சை நடந்தது. பரீட்சை நடந்து சில தினங்களில் பாடசாலை அதிபர் எமது வகுப்பு மாணவர்கள் அனைவரையும் தமது காரியாலயத்திற்கு அழைத்தார். அங்கே சென்ற எமக்கு எமது மதிப்பீட்டெண்கள் வாசித்துக் காட்டப்பட்டன. மேற்படி ஐயா அவர்களின் பாடங்களில் எந்த மாணவரும் சித்திபெறவில்லை.

"தமிழ் மொழியையே எழுதத் தெரியாத நீங்கள் எப்படிப்பரீட்சை எழுத முடியும்? ஒருவரையும் பரீட்சைக்கு அனுமதிக்க முடியாது" என அதிபர் கூறிவிட்டார்.

நாங்கள் சிலர் துணிந்து "நாங்கள் கவனமாகப் படித்துச் சித்திபெறுவோம்" எனக் கூறினோம். அப்படியானால் ஐயா அவர்களிடம் சென்று அனுமதி பெறும்படி அதிபர் கூறினார். நாம் ஐயாவிடம் சென்றோம். வேண்டுகோள் விடுத்தோம். எம் எல்லோரையும் எமது வாக்குறுதிகளை எழுத்து மூலம் தரும்படி கோரிப் பெற்றுக் கொண்ட ஐயா அவர்கள், "சித்திபெறாவிட்டால் எனது முகத்தில் விழிக்க மாட்டீர்கள்" எனக் கண்டிப்புடன் கூறிவிட்டார்.

எல்லோரும் மேன்மேலும் கவனம் எடுத்துப் படித்தோம். பரீட்சையில் எல்லோரும் இப்பாடங்களில் திறமையாகச் சித்தி பெற்றோம்.

இச்சம்பவம் தொடர்பாகப்பின்னர் நாம் அறிந்து கொண்ட தகவல் இது.

ஐயா அவர்கள் வேண்டுமென்றே எல்லோருக்கும் மதிப்பீட்டெண்களைக் குறைத்துத்தந்துள்ளார். அப்படிச் செய்தால்தான் கவனமெடுத்து மென்மேலும் படித்து நல்ல சித்திபெறுவோம் என்பது அவரின் கணிப்பு. அவரின் கணிப்புத்தவறவில்லை.

இதில் சுவாரசியமான ஒரு விடயமுண்டு. எமது வகுப்பு மாணவர்களில் ஐயாவின் மூத்த மகள் செல்வி தர்மாம்பிகையும் ஒருவர். அவர் வகுப்பில் எம்மை விடக் கெட்டிக்காரி. ஆனால் அவருக்கும் ஐயா பயன்படுத்திய யுக்தி ஒரே மாதிரித்தான். ஆனால் இந்து சமயபாடத்தில் அவருடைய மகள் எம்மை விடத்திறமையாக நூன சித்தி பெற்றார்.

தமது பிள்ளைகளையும் ஏனைய பிள்ளைகளையும் சமமாகக் கணிக்கும் இவரின் சுபாவத்திற்கு இது ஒரு சான்று.

இன்று நாம் தமிழில் சிறந்த பாண்டித்தியம் பெற்றுத் திகழ இது போன்ற ஐயாவின் செயற்பாடுகளே காரணமென்றால் மிகையாகாது.

ஒருநாள் தமிழ் வகுப்பில் எல்லா மாணவர்களையும் ஒவ்வொரு சிலேடைச் சொல் கூறும்படி கூறினார். எல்லோரும் ஒவ்வொன்று கூறிவந்தனர். ஒருமாணவியின் முறை வந்தது. முன்னர் பல சொற்கள் கூறப்பட்டுவிட்டதனால் அவருக்குச் சிரமமாக இருந்தது.

"உதையா கேட்கிறாய்" என்றார்.

இச் சொற்பிரயோகம் நாகரிகமற்றதென நினைத்து அவர் முதலில் கூற விரும்பவில்லைப் போலும், வேறு வழியின்றி தயக்கத்துடன் கூறினார்.

"என்னைப்பார்த்து இந்தக் கேள்வி கேட்கிறீரா?" என்று முறைப்பது போலக் காட்டிய ஐயா அவர்கள் மறுகணம் ஒரு புன்சிரிப்பை வெளியிட்டு அம் மாணவியின் கன்னத்தில் தட்டிக் கொடுத்து விட்டுச் சென்றார்.

ஒரு முறை பயணக்கட்டுரை எழுதும்படி கூறினார். நான் விடுமுறைக்குக் கொழும்பு சென்று திரும்பியதாக ஒரு பயணக்கட்டுரையை எழுதிக் கொடுத்தேன். அதில் கொழும்பிற்கு புகையிரதத்தில் பயணம் செய்ததாகக் காண்பித்து ஆங்காங்கே நடந்த சம்பவங்களையும் கண்ட காட்சிகளையும் வர்ணித்து கட்டுரையின் பெரும்பகுதியை நிறைவு செய்திருந்தேன். பின்பு ஆகாய விமானத்தில் திரும்பி வந்ததாக முடித்திருந்தேன். இது ஒரு சில வசனங்களில் அடங்கி விட்டது.

**கு.சிவபாலசுந்தரம்பிள்ளை**

வாசித்து விட்டு "நீர் விமானத்தில் திரும்பியதனால் விரைவாக வந்துவிட்டீர், அதனால் கட்டுரையின் நிறைவுப் பகுதியும் சுருங்கி விட்டது போலும்" என்று என்னிடம் கூறினார்.

ஒரு நாள் எமது வகுப்பிற்குக் கணித பாடத்திற்குரிய ஆசிரியர் விடுமுறையிலிருந்ததனால் வருகை தரவில்லை. மாணவர்கள் எல்லோரும் சத்தமிட்டபடி இருந்தனர்.

திடீரென ஐயா எமது வகுப்பிற்குள் பிரவேசித்தார்.

"இப்போது என்ன பாடம்?" என்றார். கணிதம் என்று கூறினோம்.

"நான் ஒரு கணக்குத் தருகிறேன் செய்யுங்கள்" என்று கூறிவிட்டு அதனைக் கூறினார். கணக்கு இதுதான்:-

'நான் காலையில் மணிக்கூட்டைப் பார்த்தபோது மணிக் கம்பி 6க்கும் 7க்கும் இடையிலும் நிமிடக் கம்பி 1க்கும் 2க்கும் இடையிலும் காணப்பட்டன. மாலையில் நான் பார்த்தபோது கம்பிகள் இரண்டும் இடம்மாறி நின்றன. நான் காலையில் பார்த்த நேரம் என்ன?'

கணக்கைத் தந்து விட்டுப் பின் வருமாறு கூறினார்.

"இக்கணக்கை இன்று செய்து முடிக்க முடியாவிட்டால் நாளை செய்யுங்கள். அன்றும் முடியாவிட்டால் நாளை மறுதினம் செய்து முடியுங்கள்" என்று கூறிவிட்டு ஐயா சென்று விட்டார். வகுப்பிலே ஒரே நிசப்தம். எப்படிச் செய்வது என்று சிந்தனையைச் செலுத்தத் தொடங்கி விட்டோம். உண்மையில் அதனை ஆராய்ந்து செய்து முடிக்க மூன்று நாள்கள் சென்றன.

இப்படியாக ஐயா அவர்களின் இனிய நினைவுகள் என்றும் எமது நெஞ்சை விட்டு அகலாதவை. அவரின் அறிவுரைகள் தவிர்க்க முடியாதவை.

ஐயா அவர்கள் இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டில் பிறந்திருந்தால் ஒரு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக நிச்சயம் அமர்த்தப்பட்டிருப்பார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்துக்கு கூட்டணி எதிர்ப்புத் தெரிவித்தது ஏன்?

## துண்டுபிரசுரத்தில் விளக்கம்

யாழ்ப்பாணம்,செப்.20

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது அடிப்படை இலட்சியத்தில் இருந்து விலகாது உறுதியாக நிற்கிறது. தனது இலட்சியத்தை அடைவதற்கான ஏணிப்படியாகவே பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகியவை தமிழர் விடுதலைக் கூட்டணியால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால் சந்திரிகா அரசினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டம் அப்படியானது அல்ல. சமாதானத்துக்கான போர் என்ற போர்வையில் முன்னெடுத்துச் செல்லப்படும் இராணுவ நடவடிக்கையால் தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் முன் எப்போதும் இல்லாதவாறு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலை ஒட்டி வெளியிட்ட பிரசுரத்தில் தெரிவித்துள்ளது.

பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர்களுக்குரிய கல்வி, வேலைவாய்ப்புக்கள் அருகிவிட்டன. வடக்கில் சிறந்து விளங்கிய கல்விக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. மீன்பிடி, விவசாயம் மற்றும் கைத் தொழில்கள் யாவும் முற்றாகவே போரினால் அழிக்கப்பட்டுள்ளன. இன்று குண்டு வீச்சுக்களால் எஞ்சியவையும் நாசமாக்கப்படுகின்றன. விவசாயிகள் முழுமையாக விவசாயம் செய்ய முடியவில்லை. மீனவர் மீன் பிடிக்க முடியவில்லை. இராணுவத்தினராலும், கடற்படையினராலும் அடக்கு முறைக்குள் அவர்கள்படும் அவலம் சொல்லொணாத் துயரம் மிக்கதாகும்.

தொழிலின்றி வாழும் மீனவர்கள் அகதி முகாம்களில் பட்டினி கிடக்கின்றனர். விவசாயிகள் மற்றும் அன்றாடத் தொழிலாளர்கள் உழைப்பின்றி அத்தியாவசியப் பொருள்களையே வாங்கச் சக்தியற்றவர்களாகப் பரிதவிக்கின்றனர்.


அத்துடன் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் சோலைவரி, யுத்தவரி என்பவற்றாலும் வாழ்க்கைச் செலவு பயங்கரமாக உயர்ந்து விட்டது. யாழ்.குடாநாட்டில் மக்கள் அரைகுறைப் பட்டினியோடுதான் வாழ்க்கை நடத்துகின்றனர். சுருங்கக் கூறின் எமது பொருளாதாரமே நலிந்து விட்டது. எமது மக்கள் இராணுவக் கெடுபிடிகளுக்கு உள்ளாகிப் பல்வேறு துன்பங்களையும் சொல்லொணாத் துயரங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்து அநாதரவாக உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் அகதி முகாம்களில் தங்கி வாழும் துர்ப்பாக்கிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். சுமார் 70 ஆயிரம் மக்கள் பலியாகியுள்ளனர்.

இத்தகைய நிலையில் இருந்து எமக்கு விடிவு ஏற்பட வேண்டின் நாம் கடந்த காலங்களில் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கும் சொல்லொணாத் துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஒரு நிரந்தரத் தீர்வு அவசியமானதாகும். இத்தகைய தீர்வே தமிழ் மக்கள் தமது தாயகமான வடக்கு-கிழக்கில் சுயமாக ஆட்சி செய்ய வழிவகுக்கும். தமது பாதுகாப்பு உட்பட்ட நலன்களைப் பாதுகாக்க வழி செய்யும். இதனைச் சந்திரிகாவின் தீர்வுப் பொதி அளிக்கவில்லை.

சந்திரிகாவின் தீர்வுப்பொதியில் தமிழ் இனம் தனியான கலாசாரப் பண்புகளையுடைய ஒரு தேசிய இனம் என்பதோ அவர்களின் பாரம்பரியத் தாயகம் ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாணம் என்பதோ அங்கீகரிக்கப்படவில்லை. அத்துடன் நாடாளுமன்றத்தில் எமது எண்ணிக்கையைக் குறைக்க, அரசியல் அதிகாரத்தைப் பறிக்க மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களுக்கு வழிவகுக்கும் காணி அதிகாரமும் கொழும்பு அரசிடம் இருக்கவே வழிகோலுகிறார்.

கடந்த 50 ஆண்டுகளாகக் கிழக்கு மாகாணத்தில் சிங்கள அரசுகளினால் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட பல இலட்சம் சிங்கள மக்கள் கருத்துக் கணிப்பொன்றில் வாக்க




ளிப்பதன் மூலம் தமிழர் தாயகத்தை வடக்கென்றும் கிழக்கென்றும் பிரித்துவிட வழிவகுக்கப்பட்டுள்ளது.

அரைகுறைத் தீர்வுப் பொதியை முன்வைத்து விட்டுச் சர்வதேச சமூகத்தை நம்ப வைக்க சந்திரிகா முயற்சிக்கிறார். அவர் போரைத் தீவிரப்படுத்தும் தந்திரத்தையும் உணர்ந்து கொண்டதனால்தான் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்தது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-4)

# ஸ்ரிக்கரில் மறைந்துள்ள இரகசிய சின்னம் எது?

## ஒக். 10ஆம் திகதியே தெரியவரும்

கொழும்பு,செப்.20

வாக்காளர் அட்டையில் ஒட்டப்பட்டுள்ள ஸ்ரிக்கரில் மறைந்திருக்கும் இரகசிய சின்னம் குறித்துத் தேர்தல்தலுக்கு இரு நாள்களுக்கு முன்னா சகல தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்படுமென உதவித் தேர்தல் ஆணையாளர் கே.சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்த ஸ்ரிக்கர் ஒட்டப்பட்ட வாக்காளர் அட்டைகள் நாடு முழுவதிலும் நாளை 21ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படும்.

போலி வாக்காளர் அட்டைகள் பெருமளவில் அச்சடிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் செயலகத்துக்குக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே, வாக்காளர் அட்டைகளில் ஸ்ரிக்கர்கள் ஒட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் மோசடிகளைத் தடுக்க முடியும்.

இந்த ஸ்ரிக்கர்கள், வாக்களிப்பு நிலையங்களிலிருக்கும் அதிகாரிகளுக்கு உண்மையான வாக்காளர் அட்டை எதுவென அறிய உதவும். இந்த ஸ்ரிக்கரில் உள்ள இரகசியச் சின்னம் குறித்த விவரங்கள் ஒக்ரோபர் 10ஆம் திகதி சகல தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்படும்.

வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கச் செல்வோரின் அடையாளத்தை நிரூபிக்க அடையாள அட்டை அவசியம் தேவை. தங்கள் அடையாளத்தை நிரூபிக்க முடியாதவர்கள் தெரிவத்தாட்சி அதிகாரிகள் வழங்கும் படிவங்களை நிரப்பிக் கொடுத்த பின்னர் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவித்தார். (இ-20)

# தமிழர்களைத் துன்புறுத்துவது மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியாது

## பொ.ஐ.மு. வேட்பாளர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.20

வடக்கு - கிழக்கில் நிலவும் யுத்தத்தின் கொடூரம் தாங்கமுடியாது தெற்குக்கு இடம் பெயர்ந்து வாழும் அப்பாவித் தமிழ் மக்கள் படும் துன்பதுயரங்களை நான நன்கு அறிவேன். பொலீஸ் பதிவு, வாடகை, இனவாதிகளின் விரும்பத்தகாத நடத்தைகள் போன்ற பல்வேறு நிலைவரங்கள் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துகின்றன. தமிழ் மக்களின் உணர்வுகளை என்னால் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். அவர்களுடன் மிக நெருங்கிப் பழகும் சிங்கள அரசியல்வாதி என்ற வகையில தமிழர்களுக்கு தேசிய அளவில் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை என்று கவலைப்படுவதுண்டு. பலதடவைகள் எனது தமிழ் வர்த்தக நண்பர்களுடன் யாழ் நகருக்குச் சென்று இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் அல் லலுறும் மக்களின்துயரங்களைக கண்டறிந்து கொழும்பு திரும்பியவுடன் அவர்களது கஷ்டங்களைப் போக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

இவ்வாறு கோட்டை ஜெயவர்த்தனபுர மாநகரசபையின் மேயரும் பொதுமக்கள ஐக்கிய முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான எஸ். சந்திராசில்வா கூறினார்.

கொழும்பு வாழ் தமிழ் மக்கள் மத்தியிலான அறிமுக ஒன்று கூடல் நிகழ்வு அண்மையில் வெள்ளவத்தை டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தையில நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழன் என்ற ஒரே காரணத்துக்காக கொழும்பிலும் ஏனைய தென் பகுதிகளிலும் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதை நான் முற்றாக வெறுக்கிறேன். இனவாத சிந்தனையுடன் இனநெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது. இனநெருக்கடியை வியாபார நோக்கில் பாராமல் திறந்த மனத்துடன் தமிழ்மக்களின் பிரச்சினை அணுகப்படவேண்டும். இதற்காக உழைப்பதே எனது அடுத்த அரசியல் குறிக்கோள் ஆகும்.

எனது கோட்டை மாநகர சபை எல்லைக்குள் வாழும் மூவின மக்களின் ஒற்றுமையும், புரிந்துணர்வும் இலங்கை முழுவதற்கும் ஓர் உதாரணமாக இருக்கிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.க. பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிபெற்றால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைக் கட்சியாகவும், ஜனாதிபதி இன்னொரு கட்சியாகவும் இருக்கும் இந்த நிலைமை இலங்கையை அதலபாதாளத்தில் தள்ளிவிடும். இப்பொழுது யுத்தத்தின் கொடூர பிடியில் இருந்து விடுபட முடியாமல் நாடு தவித்துக் கொண்டிருக்கிறது. ஜனாதிபதி - நாடாளுமன்ற முரண்பாடு தொடர்ந்தால் நாட்டின் எதிர்காலம் என்ன? அபிவிருத்திகள எப்படி நடைபெறும்? எனவே பொ.ஐ.முன்னணியை ஆதரிப்பதுடன்எனக்கும் வாக்களியுங்கள்.

இப்படி அவர் கூறினார். (இ-4)

# பிரபாவுக்கு தேசியப் பட்டியலில் நாம் இடம் அளிக்கவில்லை

## ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு,செப்.20

என்னுடன் விவாதிப்பதிலிருந்து தப்பி ஓடுவதற்காக ஜனாதிபதி பவு



டர் பேபிகளையும் தேசத்துரோகிகளையும் பயன்படுத்துவதற்கு முயற்சிக்கிறார். எமது கட்சியின் தேசியப் பட்டியலில் நாம் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையோ அல்லது அரசமைப்புக்கு விரோதமாகச் செயற்பட்ட தேசத்துரோகிகளையோ சேர்த்துக் கொள்ளவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

குருநாகல் மாவட்டத்தில் கலகெதர, மாவத்கம ஆகிய இடங்களில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அவர் உரை நிகழ்த்தும் போது மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டின் அரசமைப்புக்கு தலைசாய்த்துச் செயற்படுவதாக உறுதிமொழி செய்து கொண்டு வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சராகச் செயற்பட்ட வரதராஜப் பெருமாள் 1990 ஆம் ஆண்டில் அரசமைப்புக்கு எதிராகத் தனிநாட்டைப் பிரகடனப்படுத்தி தமிழீழக் கொடியை ஏற்றிவிட்டு நாட்டை விட்டுத் தப்பி ஓடினார். பெருமாள் செய்தது தேசத்துரோகச் செயல் என்பதை உலகமே அறியும். அதே போன்று தான் அரசமைப்பைப் பாதுகாப்பதற்கு இரண்டு தடவைகள் உறுதிமொழி எடுத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பைக் கிழித்தெறியப் போவதாகக் கூறுகிறார். இந்த வகையில் நோக்கும் போது அவர்களிருவருக்குமிடையில் எந்தவித வித்தியாசமுமிருப்பதாகத் தெரியவில்லை.

1972ஆம் ஆண்டின் குடியரசு அரசமைப்பில் உள்ளடக்கப்பட்ட அரசமைப்பைப் பாதுகாக்கும் பகுதி 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பிலும் அதேவிதமாகீ இடம்பெற்றுள்ளது. அதற்கு எதிராகவே வரதராஜப் பெருமாள் செயற்பட்டு வடக்கு - கிழக்கில் தமிழீழப் பிரகடனத்தைச் செய்தார். அந்தச் சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்புடன் வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைத்தது. பெருமாள் தனது பாதுகாப்புக்காக-இந்தியாவுக்குத் தப்பியோடினார்.

இன்றைய ஜனாதிபதி அரசமைப்பில் திருத்தம் கொண்டு வருவதற்குப் பதிலாக தான் பதவியில் நீடிப்பதற்காகப் புதிய அரசமைப்பொன்றைக் கொண்டுவர முயற்சிக்கின்றார். மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்குப் பதிலாக நாடாளுமன்றத்தில் ஓர் அதிகப்படியான வாக்கால் இதனைச் செய்யப் போவதாகக் கூறுகிறார்.

இந்த நாட்டின் வரலாற்றில் எந்தவொரு தலைவரோ அல்லது கட்சித் தலைவர்களோ நடந்து கொள்ளாத விதத்தில் ஜனாதிபதி நடந்து கொள்வதைப் பார்க்கும் போது வரதராஜப் பெருமாளுக்கும், அவருக்கும் எந்தவித வேறுபாட்டையும் காண முடியாது.

நாட்டு மக்கள் சந்திரிகாவுக்கு அதிகாரத்தைக் கொடுத்தது அரசமைப்பில் திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காகவே. இப்போது அவர் ஒரு சர்வாதிகாரியாக மாறப் பார்க்கிறார். ஜனநாயகத்தை நேசிக்கும் எந்தப் பிரஜையும் அதனை அங்கீகரிக்கப் போவதில்லை.

ஆட்சி நடத்தும் அரசால் நாட்டில் ஸ்திரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது போனால் நாடு அழிவுப் பாதையை நோக்கியே செல்லும். அத்தகைய நிலைதான் இன்று எமது நாட்டுக்கும் ஏற்பட்டுள்ளது. இந்தப் பேரழிவிலிருந்து எமது நாட்டையும் மக்களையும் மீட்டு உறுதியான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய சக்தி ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமே உண்டு.

சுதந்திரத்துக்குப் பின்னர் ஒவ்வொரு தடவையும் நாட்டின் பொருளாதாரத்தை ஐ.தே.கவே உறுதியாகக் கட்டி எழுப்பியது. பண்டாரநாயக்க அரசுகள் அவற்றைச் சீர்குலைத்தன.

அழிவின் விளிம்புக்குள் சிக்கியுள்ள நாட்டைக் காப்பாற்றுவதற்கு மக்கள் ஒன்றுபட வேண்டிய தருணம் வந்துவிட்டது.

இப்படி அவர் கூறினார். (இ-20)

### தெற்கில் நள்ளிரவு வரை தேர்தல் பிரசாரம்

கொழும்பு,செப்.20

தென் இலங்கையில் தேர்தல் பிரசாரம் கடும் சூடு பிடித்துள்ளது. நகரங்களில் மாத்திரமன்றி சிறிய கிராமங்களிலும் கூட அனைத்து அரசியல் கட்சிகளும் இரவு 12 மணி வரை தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தி வருகின்றன.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலுள்ள சிறிய கிராமங்கள் தோறும் அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் காரியாலயங்களைத் திறந்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

வீதிகள், வாகனங்கள் மற்றும் படகுகள், தோணிகளிலும் கூட கட்சிக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. (இ-20)

## வேட்பாளர் பட்டியலில்

# அஷ்ரப்பின் இடத்துக்கு அவரது மனைவியை நிறுத்த முடிவு

## முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குழுக் கூட்டம் தீர்மானம்

கொழும்பு,செப்.20

திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் பட்டியலில் காலஞ்சென்ற அஷ்ரப்பின் இடத்துக்கு அவரது மனைவியான பேரியா அஷ்ரப்பை நிறுத்துவது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் குழுக்கூட்டம் கடந்த ஞாயிறன்று கூடி முடிவு செய்துள்ளது.

அரசியல் குழுக் கூட்டம் நிறைவேற்றிய மற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

- ஹெலி விபத்துக் குறித்து பலவிதமான சந்தேகங்கள் எழுப்பப்படுவதால் இந்த விபத்தின் உண்மை நிலையைக் கண்டறிவதற்கு விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கோருவது.
- துறைமுக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸின் உப தலைவர்களில் ஒருவரான ரவூப் ஹக்கீமுக்கு வழங்குமாறு அரசாங்கத்தைக் கோருவது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பதவியை திருமதி அஷ்ரப்பிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பலரும் யோசனை தெரிவித்தனர். எனினும் மத ஆசாரப்படி 40 நாள்கள் அவர் வீட்டை விட்டு வெளியேற முடியாது என்பதால் இந்த யோசனைக்குப் பதிலாக தலைமைப் பொறுப்பை மூவர் அடங்கிய கூட்டுக் குழுவிடம் ஒப்படைப்பது குறித்து ஆராயப்பட்டது.



அஷ்ரப்பின் மனைவி பேரியா அஷ்ரப், ரவூப் ஹக்கீம், மருதூர் கனி ஆகியோரையே கூட்டுக் குழுவுக்கும் நியமிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

எனினும் இந்த முடிவுகள் முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் பீடமான உலமா சபையின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். உலமா சபையில் இந்தத் தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்பட்டபோது சர்ச்சை காரணமாக தீர்மானங்கள் அங்கீகரிக்கப்படாமலேயே கூட்டம் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# நாவலர் வழியில் சமயப் பிரசங்கம் புரிந்து வரும் சிவ. மகாலிங்கம்

## கௌரவிப்பு விழாவில் பாராட்டு

'நாவலர் வழியில் சைவ சமய வளர்ச்சியின் பொருட்டுச் சைவப் பிரசங்கம் செய்து வருகின்ற பலாலி ஆசிரிய கலாசாலை உப அதிபர் சிவ மகாலிங்கம் அவர்களது சேவை மகத்தானது. பொன்னையோ பொருளையோ கருதாது மிக நீண்டகாலமாகவே இந்த நல்ல பணியை ஆற்றி வருகின்றார். பிரசித்தி வாய்ந்த உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் மஹோற்சவ காலத்தில் சிவத்தமிழ் வித்தகர் தொடர் சொற்பொழிவு ஆற்றியதன் மூலம் மக்கள் மனதில் சமய உணர்ச்சியை நன்கு ஏற்படுத்தியுள்ளார். பொன்னாடை போர்த்து அன்னவரைக் கௌரவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்'.

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலில் இடம்பெற்ற மஹோற்சவ காலங்களில் சமய விரிவுரைகள் ஆற்றிய பலாலி ஆசிரிய கலாசாலை உப அதிபர் சமயப்பிரசாரகர், சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கத்துக்குத் தீர்த்தோற்சவ தினத்தன்று பொன்னாடை போர்த்துப் பூமாலை சூட்டிக் கௌரவித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர். கலாநிதி சி. க. சிற்றம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'சிவாகம ஞானபானு' சிவஸ்ரீ க. மு. சோமசுந்தரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

பாராட்டு விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் கூறியதாவது:

பழைமையையும் பெருமையையும் எடுத்து விளக்கும் வகையில் கல்வெட்டுப் பெருமையுடன் கூடியது உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில். கருணையே உருவான கருணாகரப் பிள்ளையார் திருவாலயத்தில் உரையாற்றிய சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்களது சமயக் கருத்துக்கள் பாரம்பரியமானவை; அவரது அரிய சேவை உயர்ந்தது; பாராட்டுக்குரியது— என்றார்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார். (ஐ)

## ஓகஸ்டில் பரீட்சைக்குத் தோற்றிய

# தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 14 பேரை சமுகமளிக்க அழைப்பு

பருத்தித்துறை, செப். 20

கடந்த ஓகஸ்ட்டில் ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தில் தோற்றிய வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பதின்நான்கு தனிப்பட்டபரீட்சார்த்திகளை எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு புலோலியில் இயங்கும் வடமராட்சி கல்வி வலய அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா கேட்டுள்ளார்.

இவர்கள் பரீட்சைக்குச் சமர்ப்பிக்க வேண்டிய ஒப்படை, ஆய்வுக்கட்டுரை, அறிமுறைப்பரீட்சை, செயன்முறைப் பரீட்சை, செயல் திட்டங்கள் ஆகியன தொடர்பான மதிப்பீடுகள் பற்றிய அறிவுறுத்தல்களை வழங்கவே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அழைக்கப்பட்ட மாணவர் விவரம் வருமாறு:

செல்வி சங்கீதா தியாகராஜன் (இமையாணன்), பரந்தாமன் ஜெயமோகன் (அல்வாய்),செல்லையா கனகரத்தினம் (உடுப்பிட்டி), செல்வி தர்மலிங்கம் பிரபா (உடுப்பிட்டி), செல்வி விஜயரத்தினம் சுபாஜினி (உடுப்பிட்டி), செல்வி தமிழினி தம்பிராஜா (அல்வாய் தெற்கு), செல்வி ஜோகராஜா சங்கீதா (உடுப்பிட்டி), சிவகுருநாதன் கலைச்செல்வி (அல்வாய்), கதிர்காமலிங்கக் குருக்கள் ஜெயக்குமார் (தொண்டமனாறு), செல்வி சிவபால சுப்பிரமணியம் ரோஹினி (பருத்தித்துறை), செல்வி பாமினி இராஜேந்திரம்(பருத்தித்துறை),செல்வி கணேசராசா அனுஷா (தும்பளை மேற்கு), செல்வி மயில்வாகனம் அகிலா (அல்வாய்), செல்வி நந்தினி குலவீரசிங்கராஜா (கரவெட்டி).

(ஐ-118)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப். 20

கொக்குவில் அருள்மிகு மாத்தனைக் கந்தசுவாமி கோயிலில் நூதனப் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீதேவி பூதேவி சமேத மஹாவிஷ்ணு மற்றும் இராஜராஜேஸ்வரி அம்பாளினதும் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் முருகப்பெருமானுக்கு சதசங்காபிசேகமும் நாளை வியாழக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிற்பகல் அருட்கவி சீ விநாசித்தம்பியின் அருளுரை, சோ. பத்மநாதன், து. வைத்திலிங்கம் ஆகியோரின் சமயச் சொற்பொழிவு ஆகியன இடம்பெறும். (இ-3)

★ ★ ★

யாழ். போதனா வைத்தியசாலை புனித வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின் திருநாள் கொண்டாட்டங்கள் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இந்தக் கொண்டாட்டங்களில் வியாழன், வெள்ளி இருதினமும் மாலை 4 25 மணிக்கு வழிபாடுகளும், 23 ஆம் திகதி மாலை 4.25 மணிக்கு குணமாக்கல் வழிபாடும், 24 ஆம் திகதி காலை 7.15 மணிக்குத் திருநாள் திருப்பலிப் பூசையும் இடம்பெறவிருக்கின்றன.

(ஜ-13-139-ரி)

★ ★ ★

யாழ். நக்கா வீதி, புனித திரேசாள் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து11 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாட்டு ஆராதனை, வழிபாடுகள் நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குத் திருநாள் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆலய பங்குத்தந்தை அருட் திரு. ஆர். ஜி. எம். நேசநாயகம் அடிகளார் தலைமையில் இடம் பெறும். (ஐ30)

## ஒன்றுகூடுமாறு அழைப்பு

மத்திய போக்குவரத்துச் சபையில் பட்டதாரிப் பயிலுநராக நியமனம் பெற விரும்புவோரை இன்று காலை 7-30 மணிக்கு பட்டதாரிகள் சங்கத்தில் ஒன்றுகூடுமாறு சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

# தெல்லிப்பழை ஆலயப்பூசை ஒழுங்கு ஏனைய கோயில்களுக்கு முன்மாதிரி

## பாராட்டு விழாவில் நீதிவான் உரை

நெல்லியடி, செப். 20

''தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில், அந்தணர்கள் மேற்கொள்ளும் சமயக் கிரியைகளையும், அடியார்கள் கடைப்பிடிக்கும் ஒழுங்கு முறைகளையும், ஏனையவர்கள் பின்பற்றினால் எமது சமூகம் அறத்தின் வழியில் நிலைத்து நிற்கும்.''

இவ்வாறு அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவப்பிரம்மஸ்ரீ சிவ. சுரேஷ்வரக் குருக்களின் பட்டமளிப்பு விழாவில் ஆசியுரை வழங்கிய பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் தெரிவித்தார்.

இப்பாராட்டு விழா கடந்த மாதம் 22 ஆம் திகதி ஆலய மண்டபத்தில பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

அங்கு தொடர்ந்து ஆசியுரை வழங்கிய மாவட்ட நீதிவான் —

ஆலயத்தில் வழிபடும் அடியார்கள் வழிபாட்டு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். தெய்வ சந்நிதியில் திரைச்சீலை போடப்பட்ட வேளை வழிபாடு செய்யக் கூடாது. பூஜை வேளை அமைதியாக, பக்தி சிரத்தையுடன் வழிபாட்டைத் தரிசிக்க வேண்டும். தெய்வ வழிபாட்டிலே முக்கிய அம்சமாகக் காணப்படுவது தீபாராதனையே ஆகும். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் பூசைகள், வழிபாடுகள் ஒழுங்காக நடைபெறுகின்றன. இவற்றைப் பார்த்து ஏனைய ஆலய நிர்வாகிகளும், அந்தணர்களும் பின்பற்ற வேண்டும்.

இளம் வயதில் தேர்ச்சி பெற்று,சமயக் கிரியைகளைத் திறம்பட நடத்தியமையாலே இன்று அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சிவ. சுரேஷ்வரக் குருக்களுக்கு 'சிவாகம கிரியாநிதி' என்ற பட்டம் சூட்டப்பட்டுள்ளது.

அவர் மேலும், சமயத் தொண்டுகளில் சிறந்து மிக உயரிய இடத்துக்குச் செல்லப் பிரார்த்திக்கின்றேன் — என்றார் மாவட்ட நீதிவான்.

இவ் விழாவில் சமஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா, சிவ. சுரேஸ்வரக் குருக்களுக்குப் பொன்னாடை போர்த்த, பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ் ஏ. ஈ. ஏகநாதன் வாழ்த்துரை வழங்கி, பதக்கம் சூட்டினார்.

நீர்வேலி கந்தசுவாமி கோயில்பிரதமகுரு சிவப்பிரம்மஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் 'சிவாகம கிரியாநிதி' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

(ஜ-109)

# செய்திக் கொத்து

## சத்துணவு விநியோகம்

நெடுந்தீவு, செப். 20

நெடுந்தீவு பிரதேசசபை, கர்ப்பிணித்தாய் மார்களுக்கான சத்துணவு விநியோகத்தை ஆரம்பித்துள்ளது.

முதல் கட்டமாக ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்கள் நூற்றுநாற்பது பேருக்கு சத்துணவு விநியோகிக்கப்படவுள்ளதாகவும் — தொடர்ந்தும் சத்துணவு விநியோகம் இடம்பெறும் எனவும்— யாழ். உள்ளூராட்சித் திணைக்களம் இதற்கான நிதியுதவியை அளித்துள்ளதாகவும் பிரதேச சபைத் தலைவர் அ. வெ. அரியநாயகம் தெரிவித்தார். (க-111)

## சான்றிதழ் வழங்கல்

ஊர்காவற்றுறை, செப்.20

ஊர்காவற்றுறை எமிலியானுஸ்பிள்ளை தொழில் நுட்பக்கல்லூரியில் மரவேலை, வீட்டு மின் இணைப்பு ஆகிய பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த 20 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் ஊர்காவற்றுறை றோ. க. த. கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

அருட்சகோதரர் எ.ஜே. அலோசியஸ் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர். குமாரசாமி சர்மா, அபிவிருத்தி இணைப்பாளர் அ. பற்றிக், வண. பிதா எரிக், வண. பிதா றொபின்சன் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டு பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குரிய சான்றிதழை வழங்கினர்.

இத்தொழில் நுட்பக்கல்லூரி கடந்த 10 வருடங்களின் பின்னர் தற்போது அருட்சகோதரர் ஏ. ஜே. அலோசியஸின் விடாமுயற்சியினால் மீளவும் இயங்கத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க–ரி)

## பனந்தும்பு உற்பத்தி நிலையம் திறப்பு

வேலணை, செப். 20

வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தின் பனந்தும்பு உற்பத்தி நிலையம் கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் பொது முகாமையாளர் க. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழா நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் நிலையத்தினைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ந. மதனராஜா, வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு. சண்முகநாதன் மற்றும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(க-167)

## தேங்காயின் விலை அதிகரிக்கிறது

குருநகர், செப். 20

யாழ்ப்பாணத்தில் தேங்காயின் விலை தற்போது உயர்வடைந்துள்ளது.

முன்னர்ஐந்து ரூபாவுக்கு விற்ற தேங்காய் தற்போது ஏழு ரூபாவாகவும் முன்னர் ஏழு ரூபாவுக்கு விற்ற தேங்காய் தற்போது 10 ரூபாவில் இருந்து 13 ரூபாவாகவும் உயர்வடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (க-51)

## கலாசார சபை அங்குரார்ப்பணம்

காரைநகர், செப். 20

காரைநகரில் புதிய கலாசார சபை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

''லலிதா கலாமன்றம்'' எனும் பெயரில் அமைக்கப்பட்ட இந்தக் கலாசார சபையின்தலைவராகமூத்த கலைஞர் செல்லையா கந்தசாமியும், உப தலைவராக கே. பேரின்பகுமாரும், செயலாளராக இ. லோகேஸ்வரனும், பொருளாளராக வி அனிருத்தனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-73)

## காரைநகர்ப் பகுதிக்கு மின்சாரம் இல்லை

காரைநகர், செப். 20

காரைநகர்ப் பகுதி மக்களுக்கு இதுவரை மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படாமையால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்

காரைநகர் மக்கள் மீளக்குடியமர்ந்து 5 வருடங்கள் சென்றுவிட்ட நிலையில் இதுவரை அப்பகுதிக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை.

காரைநகருக்கு மின்வசதி செய்து கொடுக்குமாறு கோரி அப்பகுதிப் பொது மக்களும் பொது அமைப்புக்களும் பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தும் இதுவரைஎவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாயிரம் குடும்பங்கள வசிக்கும் காரைநகர்ப் பகுதிக்கு சுமார் ஐம்பது குடும்பங்களுக்கு கடற்படையினரால் ஒரு சில மணிநேரம் மாத்திரம் மின் வழங்கப்பட்டு வருகின்றது.

(க–73)

## மலசல கூடங்கள் அமைக்க ஏற்பாடு

ஊர்காவற்றுறை, செப் 20

தீவகம் வடக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் காரைநகர்ப் பகுதியில் மருதபுரம், கல்லந்தாழ்வு, ஊரி ஆகிய கிராமங்களிலும்—ஊர்காவற்றுறையில் புளியங்கூடல் பகுதியிலும் —மலசலகூட வசதி அற்ற நூறு பேருக்கு ''கெயர்'' நிறுவனத்தின் உதவியுடன் தற்காலிக மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர். குமாரசாமி சர்மா தெரிவித்துள்ளார்.

(க-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆசிரியர் தேவை

தரம் 9, 10, 11 இற்கு தமிழ், கணிதம் கற்பிக்கக்கூடியவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை 21.09.2000 இற்கு முன் அனுப்பி வைக்கவும். தொடர்பு: A. ராகவன் (CASIO), 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. (78501)

## இசை வகுப்புகள்

நியூவீணா கானம் இசைமன்றில் வீணை, வயலின், புல்லாங்குழல், வாய்ப்பாட்டு, ஓர்கன், கிற்றார், றெக் கோடர், மௌத்ஓர்கன் கற்பிக்கப் படுகின்றன. தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன 16/2 ,கச்சேரி நல்லூர் வீதி அல்லது 60, வைமன் வீதி, நல்லூர், யாழ்நகர். (78498)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக் கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 3081 (C/12787)

## மணமகன் தேவை

கௌரவமான இந்து குடும்பம், கார்த்திகை நட்சத்திரம் உள்ள 33 வயது மணமகளுக்கு (அரசு வைத்தியர் A.M.O) பொறியியலாளர், கணக்காளர், பட்டதாரி, அரச வங்கி சேவை விகிதர் மணமகன் விரும்பத் தக்கது. செ.விஜயரத்தினம், முருகன் திருமண சேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். (78532)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1961 ஆம் ஆண்டு பிறந்த 7 இல் செவ்வாய் உள்ள ஆசிரியை மணமகளுக்கு படித்த நல்ல குண முள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். தொடர்புகளுக்கு விளம்பர இல. 1100, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (78541)

அரசாங்கத் திணைக்களமொன்றில் எழுதுவினைஞராக மாதம் ரூபா 8000/- வரை சம்பளம் பெறும் 1959 ஆம் ஆண்டு பிறந்த 4'10" உயர முள்ள அழகிய சிவந்த சைவ உயர்குல கேட்டை 1 ஆம் பாதம் செவ்வாய்க் குற்றமற்ற பெண்ணுக்கு உயர்ந்த பண்புள்ள மணமகன் தேவை. முதற் கடிதத்திலேயே முழு விபரமும் எதிர்பார்க்கப்படுகின்றது. விளம்பர இல. 1101, மே/பா உதயன். (78544)

## அறைகள் வாடகைக்கு

யாழ். நகரில் அறைகள் வாடகைக்கு உண்டு. ந. விக்னேஸ்வரன் அத்தாரி 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி 12.00இல் இருந்து 3.30 வரை பார்வையிடலாம். (78531)

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பாவனைக்கு உகந்த வீணை உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சாந்தினி தொலைத் தொடர்பு சேவை, கே. கே. எஸ். வீதி, இணுவில் (ஆஸ்பத்திரி முன்பாக) (78542)

## இறைச்சிக்கோழி

Broiler இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீதியோ சென்ற் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (78551)

## இசைக்கருவிகள்

ஓகன்கள் (PSR - 100, PSS - 26, CA - 110), கிற்றார்கள், Box, மிருதங்கம் ஆகிய இசைக்கருவிகள் விற்பனைக்கு உண்டு. திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் பார்வையிடலாம். தொடர்புகளுக்கு S.S. ஜஜீந்திரன், நந்தாவில் அம்மன் வீதி, கொக்குவில். (78516)

## விற்பனைக்கு

100 பிளாஸ்டிக் கதிரைகள் (புதியவை) 150 மடிப்பு குசன் கதிரைகள் (வெளிநாட்டுத் தயாரிப்பு) மற்றும் வீட்டுப் பாவனைத் தளபாடங்கள், மின் உபகரணங்கள், PIONEER (பைனியர்) ஸ்ரீரியோ செற்-8துண்டு, மின்பிறப்பாக்கி (சிறிராம்) SRIRAM HONDA-650 ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: 19/1 A, பீ.ஏ. தம்பிலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். தொலைபேசி -2453 (78565)

## யோகாசன வகுப்பு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் காலை 6மணி முதல் 7 மணிவரை மீண்டும் யோகாசன வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. ஆண், பெண் இருபாலாரும் இதில் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## குடா நாட்டில் பெருமழை

நேற்று அதிகாலை குடாநாட்டில் பரவலாக பெருமழை பெய்துள்ளது. பல இடங்களிலும் வயல்களிலும் வெள்ளம் காணப்படுகிறது. வெள்ளத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் பல சிரமங்களை எதிர் நோக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள தொழில் நிறுவனம் ஒன்றுக்கு கம்பி ஆணி தயாரிக்கும்
இயந்திர இயக்குநர் (Operater) தேவை.
*காரியாலய நேரத்தில் நேரில் வரவும்.*
**செல்வா ஹாட்வெயர்ஸ்**
120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/12986)

## OXFORD INSTITUTE

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
**A/L 2001, 2002 இணைந்த கணிதம்**
திரு. த. காங்கேசபிள்ளை
B.Sc. Dip. in. Ed., M.Phil.
விரிவுரையாளர் / கணிதத்துறைத்தலைவர் பலாலி ஆசிரிய கலாசாலை
ஆரம்பம்: 28-09-2000 4 மணிக்கு
*தொடர்புகளுக்கு:* *நிர்வாகி*
பா. மணிவண்ணன்
(78477)

## கண்ணீர் அஞ்சலி

யா/வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் (மாவிட்டபுரம்) ஆசிரியராக 30 ஆண்டுகளுக்கு மேல் கற்பித்து பல்லாயிரம் மாணவர்களைப் புகழுடன் திகழ வைத்த பேராசான், இலக்கண வித்தகர், வித்துவ சிரோன்மணி

### இ. நமசிவாய தேசிகர்

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*கோயில் வாசல், மாவிட்டபுரம்.* - ச. கந்தசாமி. (78556)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 1969 - 05 - 17



மறைவு 2000 - 08 - 22

### அமரர் பாலசிங்கம் ரகுபதி
(கண்ணன்)
(வடபிராந்திய போக்குவரத்துச்சபை - சாரதி)

22-08-2000 அன்று சிவபதமெய்திய அமரர் பாலசிங்கம் ரகுபதி (கண்ணன்) அவர்களின் 31ஆம் நினைவுநாள் நாளை (21-09-2000) வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் 23-08-2000 அன்று நடைபெற்ற அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள் செலுத்திய வட பிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி: *பெருங்குளாய் சந்தி, சாவகச்சேரி.*
தற்காலிக முகவரி: *பண்டகை, உடுப்பிட்டி.*

தகவல்:
திருமதி பாலசிங்கம் (தாய்)
(78556)

## இலக்கண வித்தகரின்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது நாட்டில் பண்டிதர்கள் புலவர்களின் பட்டங்கள் உரிய அங்கீகாரத்தைப் பெறாததனால் ஐயா அவர்கள் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராகவே இருக்க வேண்டியதாயிற்று. அதற்குரிய வேதனத்தையே பெறமுடிந்தது. அவருடைய பிற்காலத்தில் போதிய பணப் புழக்கம் தன்னிடம் இல்லாதது பெரிய மனக் குறையாக அவருக்கு இருந்தது. சரஸ்வதியும் இலட்சுமியும் ஒரே இடத்தில் வாசம் செய்யமாட்டார்கள் என்பது ஐயாவைப் பொறுத்தளவில் நிதர்சனமாகி விட்டது. ஆயினும் அவருடைய புகழ் உலகம் உள்ள வரை அழியாது. எம்மைப் பொறுத்த வரையில் ஒரு சகாப்தம் முடிந்து விட்டது. அவருடைய இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள முடியாமற்போனது அவரின் மாணாக்கர்கள் அனைவருக்கும் வேதனையளிக்கும் விடயம்தான். ★

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி
(20-09-2000)

தோற்றம் 1975 - 08 - 11



மறைவு 2000 - 08 - 21

### முருகேசு சுதர்சன் (ராசன்)
(நுணாவில் மேற்கு, விளைவேலி - சாவகச்சேரி)

திரைகடல் ஓடித் திரவியம் தேடச் சென்ற
ராசா நீ மருதடியானின் தொண்டினையும் விட்டு
நரை, திரை, மூப்பினும் ஞாபக மூட்டல்கள்
எதுவும் எட்டமுன் சடுதியில்
ஊரையும், உற்றார் உறவுகளையும் துறந்து கொழும்பு
அடைந்த நீ, அண்ணாவுடன் ஆசையாய் இருந்தாய்
சேரும் இடம் சேர முன் சென்ற இடந்தான் ஏது?
இலண்டனா, டோகராவா என்று நாம் நினைக்க
எம்மைப் பிரிந்து விண்ணுலகு சென்றாயோ ராசா?
எம் துயரம் தாங்காதே உன் நினைவால்...!

இன்று (20-09-2000) புதன்கிழமை பகல் 11 மணிக்கு நவாலி தெற்கு, மானிப்பாயில் நிகழவுறும் அந்தியேட்டி, ஆத்மசாந்திக் கிரியைக ளில் எம் ராசனின் நினைவாக கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி முருகேசு மனோன்மணி
குடும்பத்தினர்.
*நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.* (78552)

## கண்ணீரால் நனைந்து சென்ற ஓராண்டு வேதனைத்தாகம்

அன்னை மடியில் 1974 - 08 - 28



அரன் திருவடியில் 1999 - 10 - 01

### அமரர் தங்கத்துரை சத்தியகீர்த்தி

ஆண்டொன்று மாண்டு போயும் துயர விழிநீர்தானே
வற்றிவிடவில்லை ஐயா! கீர்த்தா!!
துண்டில் படு மீனதுவாய் துடிக்கின்றோம் நாம் ஐயா!
வேண்டிய தெய்வமெல்லாம் ஏமாற வைத்ததும் ஏனோ?
ஞாலம் புகழ் வல்லவராய் நாளும் மிளிர்ந்த செல்வமே!
பாழும் கும்பிடத்தில் ஏன்தான் வந்துதித்தனையோ?
காலை மாலை உலா வந்த வீதி எலாம் ஏங்கித்
தவிக்கின்றதே!
காலம் உள்ளவரை உன் நினைவுகள் யாவும் எம்
கண்ணீரால் வளர்ந்திடுமே!

உன் பிரிவால் துயருறும்
திரு. தங்கத்துரையும் (தந்தை)
குடும்பத்தினரும்,
அத்தாய் வாழ் மக்களும்.

*கப்பர் வளவு, அளவாய் கிழக்கு, அளவாய்.* (78528)

உள்ளூர் உற்பத்திப் பொருள்களை
திருகோணமலை, கொழும்புக்கு ஏற்றுவோர்

## கவனத்திற்கு

தற்போது பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''இந்துருவவனீ'' கப்பலுக்கு உள்ளூர் உற்பத்திப் பொருள்களான வெங்காயம், புகையிலை, பனம் பொருளையும் ஏனைய பொருள்களையும் ஏற்ற விரும்பு வோர் தொடர்பு கொள்ளவும்.

இக் கப்பல் திருகோணமலைக்கு மட்டுமே பொருள் களை எடுத்துச் செல்லும் என்பதனை அறியத் தருகின்றோம்.

வேல்ரேட் சென்ரர்,
114, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2822

E. R. Transport Service,
ஓடை ஒழுங்கை,
பருத்தித்துறை. (78564)



## அறிவித்தல்

யாழ். மாவட்டத் தேர்தலில் போட்டியிடும்

### சிவா பாலேந்திரன்

சட்டத்தரணியாகிய என்னை

சுட்டுக்கொன்றதாகவும், காயப்படுத்தியதாகவும், பய முறுத்தியதாகவும் சில விஷமிகளால் இம்முறை பலவித மான பொய் வதந்திகள் பரப்பப்பட்டுள்ளன. அப்படியான எந்தவொரு நிகழ்வும் நடைபெறவில்லை என்பதை எனது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனை வருக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நேரிலும் தொலைபேசி மூலமும் என் நிலைபற்றி அறிய விரும்பியவர்களுக்கும் மற்றும் அன்பர்கள், ஆதரவாளர்கள் தெரிவித்த கவலைகளுக்காகவும் நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

சிவா பாலேந்திரன்
சட்டத்தரணி

(78569)



## இதய அஞ்சலி

கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடமையாற்றும் எமது சக உத்தியோகத்தரான

திரு. க. கமலநாதன் அவர்களின்
அன்புத் தந்தையார்

### அமரர் எஸ். சுவாந்தர்

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்தஅனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல்ல அதிபர்,
உத்தியோகத்தர்கள்.

(78548)



## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையினதும்
நல்லூர் ப.நோ.கூ.சங்கத்தினதும் தலைவர்

திரு .பெ. கனகசபாபதி
அவர்களின் அன்புத் துணைவியார்

### திருமதி கனகசபாபதி தவஜோதி

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம்.

(சி/12990)



## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் ப. நோ. கூ. சங்கத் தலைவரும்,
யாழ். மா. கூ. சபைத் தலைவருமாகிய

திரு. பெ. கனகசபாபதி
அவர்களின் அன்புப் பாரியார்

### கனகசபாபதி தவஜோதி

அவர்களின் மறைவுச் செய்தி அனைவரையும் ஆறாத் துயரில் ஆழ்த்தி உள்ளது. அவரின் இழப்பால் துய ருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

யாழ். மா. சி. க. கூ. ச. சமாசம்,
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/12992)


## மாணவரின் அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், செப். 20

கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயத்தில் இருந்து விசேட/தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் இன்று முதல் எதிர்வரும் வெள்ளி வரை சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் பிற்பகல் ஒரு மணிக்கும் 4 மணிக்கும் இடையில் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ–74)

## உடற்கல்வி மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 20

உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிப் பரீட்சைக்குத் தோற்றிய முதலாம் வருட, இரண்டாம் வருட மாண வர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக் கழக உடற்கல்வி விரிவுரை மண்டபத்தில் நடைபெற வுள்ளது. (ஐ)

## காயம்

நெல்லியடி, செப். 20

கச்சாய் — கொடிகாமம் வீதியில் கடந்த ஞாயிறு மாலை வீழ்ந்த ஷெல் சிதறல் பட்டு வயோதிப மாது ஒருவர் காலில் காயமடைந்தார்.

மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த இராமலிங்கம் தவமணி (வயது 68) என்பவரே காய மடைந்து மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். (ஐ–109)

## போஷாக்குக் கருத்தரங்கு

சண்டிலிப்பாய், செப். 20

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக பிரிவில் பாடசாலை மாணவர்கள், வயது வந்தவர் கள், தாய்மார்கள், முன் பள்ளி ஆசிரியர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், இளைஞர்கள், யுவதிகள் ஆகியோருக்கான போஷாக்கு கருத்தரங்குகள் எதிர்வரும்23 ஆம் திகதி சனிக் கிழமை தொடக்கம் நடத்து வதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

பண்டத்தரிப்பு, மாதகல், சாவற்கட்டு, நவாலி ஆகிய இடங்களில் இப் போஷாக்குக் கருத்தரங்குகள் நடைபெற விருப்பதாக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா. வேத நாயகன் தெரிவித்தார். (ஐ 135)

## பண்டத்தரிப்பில் மக்கள்வங்கிக் கிளை திறப்பு

சண்டிலிப்பாய், செப். 20

யாழ். நகரில் இயங்கும் காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளையின் கருமபீடம், ஒன்று நேற்று முன்தினம் திங் கட்கிழமை பண்டத்தரிப்புப் பல நோக்குக் கூட்டுறவுச் சங் கக் கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க உபதலைவர் வி. சுப்பிரமணியம் சம்பிர தாய முறைப்படி கருமபீடத் தைத் திறந்து வைத்தார். மக்கள் வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையா ளர் கிங்ஸ்லி இராஜநாயகம் இதில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மக்கள் வங்கியின் சகல செயற்பாடுகளும் இக் கிளை யின் கருமபீடத்தில் இடம் பெறும் என்றும் —

இப்பகுதி மக்களும், வர்த்த கர்களும் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள முன் வரவேண்டும் என்றும் —

அவர் குறிப்பிட்டார்.

கிளை முகாமையாளர் ஆர். யோகராஜாவும் உரையாற் றினார். (ஐ–135)

# ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பங்கள் ஏற்பு

யாழ்ப்பாணம், செப். 20

எதிர்வரும் ஆண்டு நடை முறைப்படுத்தப்பட விருக்கும் ஆசிரியர்களின் இடமாற்றங் களுக்காக வலய, மாகாண மட்டத்தில் இடமாற்ற சபை கள் அமைக்கப்படவிருக்கின்றன. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பி லும் பிரதிநிதிகள் இந்தச் சபையில் அங்கம் வகிப்பார் களென செயலாளர் த. மகா சிவம் தெரிவித்துள்ளார்.

இடமாற்றத்திற்கு விண் ணப்பிக்கும் ஆசிரியர்கள் தமது இடமாற்ற விண்ணப் டத்தின் பிரதியை ஒப்படைக்க வேண்டிய பிரதிநிதிகள் பின் வருமாறு:

★ மாகாண மட்டம் — த. பஞ்சலிங்கம், கி. து. பொ. செயலாளர், 442, பருத்தித் துறை வீதி, நல்லூர்.

★ யாழ். வலயம் — கே. நகுலநாதன் (உப அதிபர்). நாவாந்துறை றோ.க. வித்தி யாலயம், செயலாளர் — யாழ். கிளை.

★ சு. கோகிலன் — இந்துக் கல்லூரி, செயலாளர் — நல் லூர்க் கிளை.

★ கே. சின்னராசா அச் செழு சைவப்பிரகாச வித்தி யாலயம் நீர்வேலி, செயலா ளர் கோப்பாய்க் கிளை.

★★ வலிகாமம் கல்வி வல யம்— அ. ஜெயகுமார் அராலி இந்துக் கல்லூரி, செயலா ளர்—சங்கானைக் கிளை.

★ இளமுருகனார் — அள வெட்டி வடக்கு அ. மி. த. பாடசாலை, செயலாளர்— தெல்லிப்பழைக் கிளை.

★ எஸ் சர்வேஸ்வரன் — இணுவில் மத்திய கல்லூரி, செயலாளர்—உடுவில் கிளை.

★ எஸ் முத்துலிங்கம் — மானிப்பாய் இந்துக் கல்லூரி, செயலாளர் — சண்டிலிப் பாய்க் கிளை.

★★ தீவகக் கல்வி வல யம்— பி. அருணகிரிநாதன்— வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், தலைவர்— வேலணைக் கிளை.

★ கே. சண்முகலிங்கம் — புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தி யாலயம், செயலாளர், வேல ணைக் கிளை.

★★ வடமாராட்சி கல்வி வலயம் - எஸ். கணேசமூர்த்தி, நெல்லியடி அ. மி. த. க. பாட சாலை, பொருளாளர் — யாழ். மாவட்டம்.

★★ தென்மராட்சி கல்வி வலயம்— த. பஞ்சலிங்கம்— கி. து. பொ. செயலாளர். (ஐ–றி)

## பாடசாலைகளில் உள்ள இடம்பெயர்ந்தோருக்கு மாற்று இருப்பிட வசதி

சண்டிலிப்பாய், செப். 20.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பாடசா லைக் கட்டடங்களில் தொடர்ந்தும் தங்கி உள்ள இடம்பெயர்ந்த குடும்பங் களை வேறு இடங்களில் குடி யமர்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

மானிப்பாய் மெமோறி யல் ஆங்கிலப் பாடசாலை யில் தங்கியிருக்கும் 26 குடும் பங்களும் விரைவில் அங்கி ருந்து வேறு இடங்களுக்கு மாற்றப்பட உள்ளதாக பிர தேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

சர்வதேச 'கெயர்' நிறுவ னம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஆகிய நிறுவனங் கள் இவர்களை குடியேற்று வதற்கான மேலும் ஒரு தொகை கொட்டகைகளை நிறுவிக் கொடுக்க முன் வந் திருப்பதாகத் தெரிய வந்தது.


## இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபைத்தலைவர்

திரு. பெ. கனகசபாபதி
அவர்களின் அன்பு மனைவி

### தவஜோதி கனகசபாபதி

அவர்களின் மரணச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்திற்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி !!

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை

(சி/12994)



## கண்ணீர் அஞ்சலி

எமது அங்கத்துவ சங்கமான நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தினதும், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையினதும் தலைவரான

திரு. பெ. கனகசபாபதி
அவர்களின் அன்புத் துணைவியார்

### கனகசபாபதி தவஜோதி

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக்கொள்வதுடன் அன்னாரது ஆன்மா சாந்தியடை யப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

யாழ். மா. வி. நு. கூ. ச சமாசம்,
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/12993)

## வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

# வேலைக்கான கேள்வி அறிவித்தல்

எம்மால் பின்வரும் வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1) கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 20-09-2000 — 27-09-2000
2) கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் திகதி: 28-09-2000 மு ப. 10.00 மணிவரை
3) கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி: 28-09-2000 மு.ப. 11.00 மணி
4) ஆகக்குறைந்த கேள்விகளைக் காரணம் காட்டாது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உண்டு.
5) கேள்விகள், பொருள்கள், கூலிகள் அடங்கியது தனியாகவும், கூலிக்கான கேள்வி தனியாகவும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
6) மீளளிக்கப்படக் கூடிய ஒப்பந்த வைப்புப் பணமாக ஒப்பந்தத் தொகையில் 5 வீதம் செலுத்த வேண்டும்.
7) ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விக்காரரினால் வேலைகள் பூர்த்தியடைந்து 6 மாதத்தின் பின்னர் வேலைகள் திருப்தி என உறுதிப்படுத்தப்பட்ட பின்புதான் ஒப்பந்தத் தொகையில் 10 வீதம் வழங்கப்படும்.
8) கேள்விப் படிவங்களைப் பெறுவதற்கு முன்னர் தங்களால் செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கிய பதிவுப் புத்தகங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| நவாலி வடிசாலைக் களஞ்சிய சுற்று மதில் கட்டுதல் 988' X 8' | 500.00 | 10,000.00 |

தலைவர்
வலி. ப. தெ. வ. அ. கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்.

18—09—2000 (சி/12991)

---

தொல்புரம் மூளாய்
## ஐக்கிய பரஸ்பர சகாய சங்கம் (வ-து)
# பவளவிழா - 2000

சங்க அங்கத்தவர்களின் கவனத்திற்கு

அன்புடையீர்!
மேற்படி சங்கத்தின் பவளவிழா ஐப்பசி மாதப் பிற்பகுதியில் நடத்த நிர்வாகம் தீர்மானித்துள்ளது. அங்கத்தவர்களிடமிருந்து இவ்விழாவினைச் சிறப்பாக நடத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் நிதியுதவியினையும் 05-10-2000 இற்கு முன்பதாக எதிர்பார்க்கின்றோம்.

பொ. சண்முகலிங்கம் — தலைவர்
க. வரமதேவன் — செயலாளர்

மூளாய், சுழிபுரம்.
2000—09—20 (78524)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர் (80 'A' Batch)
திருமதி மல்லிகாதேவி மார்க்கண்டு
அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் வ. அப்புக்குட்டி

அவர்கள் கொடிகாமத்தில் நேற்று (19 - 09 - 2000) செவ்வாய்க்கிழமை காலமான செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

80'A' Batch, தாதிய உத்தியோகத்தர்கள்,
யாழ். போதனா வைத்தியசாலை.

(78550)

---

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் ப. நோ. கூ. சங்கத் தலைவரும், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவருமாகிய
திரு. பெ. கனகசபாபதி
அவர்களின் அன்பு மனைவி

## திருமதி க. தவஜோதி

அவர்களின் மறைவு கேட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு கவலையுற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

(சி/12989)

---

# நினைவஞ்சலி

12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
## கணபதி தியாகேசு
(காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன மின் பகுதி உத்தியோகத்தர்,
மலர்வு 07·01·1931 உதிர்வு 31·08·1988



திருமதி
## அன்னம்மா தியாகேசு
மலர்வு 11·05·1935 உதிர்வு 21·08·2000

அன்புத் தெய்வமே! எங்களை விட்டு பன்னிரண்டு வருடங்கள் ஆனபின், உங்கள் துணைவியை, எங்கள் குலவிளக்கை எம்மிடம் இருந்து பிரித்து இன்று முப்பத்தொரு நாளாகி விட்டது.

தங்கள் இருபேரின் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப்பூக்களால் சொரியும்:

மகன்: ஜீவச்சந்திரன், புஸ்பவதனா (கரணவாய் அறிவாலயம்),
பேரன்: ஜெயமாறன் (ஜேர்மன்), றஞ்சித் (யாழ். பல்கலைக்கழகம்),
மகள்: புனிதராணி கந்தசாமி (ஆதியாமலை),
மகள்: இன்பராணி ஈஸ்வரலிங்கம் (நாவலடி),
மகன்: திருவுக்கரசு இராசமணி டனி குடும்பம் (லண்டன்),
மகன்: சிறீபாஸ்கரன் மிரண்டா றபின் (ஹொலன்ட),
மகன்: ரவிச்சந்திரன் கலா (சுவிஸ்),
மகள்: புஸ்பராணி சிங்காரம் (கனடா),
பேர்த்தி: புஸ்பமதி, ரவி (சுவிஸ்),
பெறாமக்கள்: சுதா சாந்தன் (சுவிஸ்), சாந்தி, கடவுள் (ஆதியாமலை),
சகோதரி: வள்ளிப்பிள்ளை மாணிக்கம்,
மற்றும் மருமக்கள், மைத்துனர்மார், உற்றார், உறவினர்கள்.

ஆதியாமலை, உடுப்பிட்டி (78458)

---

# கண்ணீர் அஞ்சலி

கல்விக் கடலின் கலங்கரை விளக்கு

## அமரர்
## கந்தையா குணரத்தினம்

B. Sc., DIP - in - ED.,
முன்னாள் அதிபர், யா/இடைக்காடு மகா வித்தியாலயம்

கண்ணீர் மல்க ஓதும் கவிதாஞ்சலி

இடைக்காடு மகாவித்தியாலயத்தின் இணையிலா
ஓர் அதிபராகி
விடாமுயற்சி, மேன்மை, வாய்மை, தூய்மை வளர்த்த
எம் தேவதேவே!
குணரத்தினம் எனும் மேருவாம் குணமாமலையே,
ஐயா!
தயவு, குழைவு, தண்ணளி மலரக் கனியும் அரியதோர்
புன்சிரிப்பால்
கல்விச்செல்வம் பேணி வளர்த்த நம் காமதேனுவே,
கற்பக தருவே, சிந்தாமணியே!
பல்கலைக்கழகப் படிப்புக்கப்பால் பல் துறையிலும்
நம் மாணவர் சிறக்க
நல்லன எல்லாம் சக்தியாய் ஊட்டித் தித்திக்கத்
தித்திக்கப் பேசும் தேவ தேசிகமே!
பல்குரல் ஓங்க, வானோர் நெகிழ்ந்து நல்வரவு கூறப்
பாடினோம் பணிந்தோர் கவிதாஞ்சலி!
கல்விக் கடலில் காலம் கடந்து ஒளிர் களங்கமிலா
நற்கலங்கரை விளக்கே!

யா/இடைக்காடு மகாவித்தியாலய
பழைய மாணவர் சங்கம்,

(78563)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 19ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

| | |
|---|---|
| 512/143069/A | 512/144448/A |
| 512/144448/B | 512/144448/C |
| 512/144486/A | 512/144486/B |
| 512/144486/C | 512/144486/D |
| 512/144486/E | 512/144486/F |
| 512/144494/A | 512/144494/B |
| 512/144494/C | 512/144494/D |
| 512/144535/A | 512/147857/A |
| 512/147857/B | 512/149841/A |
| 512/149841/B | 512/150032/A |
| 512/150032/B | 512/150032/C |
| 512/150032/D | 512/150032/E |
| 512/150104/A | 512/150104/B |
| 512/150164/A | 512/150164/B |
| 512/150164/C | 512/150164/D |
| 512/150164/E | 512/150180/A |
| 512/150180/B | 512/152349/A |
| 512/152420/A | 512/152426/A |
| 512/152426/B | 512/152426/C |
| 512/152436/A | 512/152436/B |
| 512/152439/A | 512/152439/B |
| 512/152439/C | 512/152439/D |
| 512/152490/A | 512/152490/B |
| 512/152490/C | 512/152616/A |
| 512/152616/B | 512/154009/A |
| 512/154009/B | 512/154009/C |
| 512/154009/D | 512/154042/A |
| 512/154042/B | 512/154050/A |
| 512/154050/B | 512/154050/C |
| 512/154050/D | 512/154061/A |
| 512/154061/B | 512/154095/A |
| 512/154095/B | 512/154154/A |
| 512/154154/B | 512/154158/A |
| 512/154195/A | 512/154195/B |
| 512/154249/A | 512/154709/A |
| 512/154709/B | 512/156213/A |
| 512/156235/A | 512/156286/A |
| 512/156329/A | 512/156339/A |
| 512/156349/A | 512/156349/B |
| 512/156360/A | 512/156379/A |
| 512/156379/B | 512/156470/A |
| 512/156470/B | 512/156470/C |
| 512/156472/A | 512/156485/A |
| 512/156485/B | 512/156503/A |
| 512/156503/B | 512/156503/C |
| 512/156558/A | 512/156560/A |
| 512/156560/B | 512/156560/C |
| 512/156562/A | 512/156562/B |
| 512/156562/C | 512/156562/D |
| 512/156562/E | 512/156562/F |
| 512/156566/A | 512/156592/A |
| 512/156592/B | 512/156631/A |
| 512/156631/B | 512/156631/C |
| 512/156658/A | 512/158996/A |
| 512/159081/A | 512/159081/B |
| 512/159081/C | 512/159131/A |
| 512/159131/B | 512/159146/A |
| 512/159146/B | 512/159240/A |
| 512/159241/A | 512/159241/B |
| 512/159283/A | 512/159283/B |
| 512/159283/C | 512/159283/D |
| 512/159289/A | 512/159306/A |
| 512/159306/B | 512/159313/A |
| 512/159313/B | 512/159313/C |
| 512/159337/A | 512/159342/A |
| 512/159342/B | 512/159342/C |
| 512/159342/D | 512/159342/E |
| 512/159375/A | 512/159384/A |
| 512/159384/B | 512/159455/A |

| | |
|---|---|
| 512/159455/B | 512/159455/C |
| 512/159455/D | 512/160987/A |
| 512/160987/B | |
| **கோப்பாய்** | |
| 511/150868/A | 511/150868/B |
| 511/150868/C | 511/153179/A |
| 511/153179/B | 511/153179/C |
| 512/140522/A | 512/140522/B |
| 512/140522/C | 512/140522/D |
| 512/140522/E | 512/140522/F |
| 512/156256/A | 512/156256/B |
| **நல்லூர்** | |
| 512/130284/A | 512/130284/B |
| 512/142865/A | 512/142865/B |
| 512/144240/A | 512/144240/B |
| 512/144240/C | 512/144578/A |
| 512/144578/B | 512/144578/C |
| 512/144578/D | 512/147933/A |
| 512/148155/A | 512/149836/A |
| 512/149836/B | 512/149836/C |
| 512/149850/A | 512/149850/B |
| 512/149972/A | 512/149972/B |
| 512/149989/A | 512/149989/B |
| 512/152388/A | 512/152388/B |
| 512/152434/A | 512/152434/B |
| 512/152434/C | 512/152447/A |
| 512/152447/B | 512/152447/C |
| 512/152447/D | 512/152496/A |
| 512/152496/B | 512/152935/A |
| 512/154048/A | 512/154048/B |
| 512/154169/A | 512/154169/B |
| 512/154269/A | 512/154269/B |
| 512/154269/C | 512/154269/D |
| 512/154269/E | 512/156196/A |
| 512/156245/A | 512/156245/B |
| 512/156245/C | 512/156245/D |
| 512/156245/E | 512/156245/F |
| 512/156245/G | 512/156269/A |
| 512/156278/A | 512/156311/A |
| 512/156311/B | 512/156311/C |
| 512/156322 | 512/156327/A |
| 512/156327/B | 512/156327/C |
| 512/156398/A | 512/156398/B |
| 512/156398/C | 512/156398/D |
| 512/156398/E | 512/156452/A |
| 512/156452/B | 512/156452/C |
| 512/156452/D | 512/156489/C |
| 512/156498/A | 512/156498/B |
| 512/156524/B | 512/156525/A |
| 512/156525/B | 512/156536/A |
| 512/156536/B | 512/156549/A |
| 512/156552/A | 512/156552/B |
| 512/156618/A | 512/156618/B |
| 512/156650/A | 512/156851/A |
| 512/159018/A | 512/159018/B |
| 512/159018/C | 512/159030/A |
| 512/159065/A | 512/159065/B |
| 512/159065/C | 512/159200/A |
| 512/159200/B | 512/159200/C |
| 512/159200/D | 512/159250/A |
| 512/159262/A | 512/159262/B |
| 512/159262/C | 512/159349/A |
| 512/159349/B | 512/159349/C |
| 512/159349/D | 512/159349/E |
| 512/159349/F | 512/159378/A |
| 512/159378/B | 512/159378/C |
| 512/159450/A | 512/159450/B |
| 512/159450/C | 512/159450/D |
| 512/160940/A | 512/160965/A |
| 512/160965/B | 512/161009/A |
| 512/161009/B | 512/161009/C |
| 512/161009/D | 512/161009/E |
| 512/161037/A | 512/161119/A |
| 512/161119/B | 512/161119/C |
| **உடுவில்** | |
| 511/157411/A | 511/157424/A |
| 511/157424/B | 511/157424/C |


## மரண அறிவித்தல்

### அண்ணாமலை இராசரத்தினம்

*(P.W.D. ஓவசியர், கம்பஹா)*

வடலியடைப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாமலை இராசரத்தினம் அவர்கள் நேற்று (19.09.2000) காலமானார்.

அன்னார் அண்ணாமலை - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் இராசநாதன் (இளைப்பாறிய இன்ஸ்பெக்ரர், மாநகரசபை, கொழும்பு), யோகாம்பிகை, மனோரஞ்சிதம் (ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலசிங்கம்(இளைப்பாறிய லிகிதர்), இராசேந்திரம் (இளைப்பாறிய பெரும்பாக உத்தியோகத்தர்), கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மகேஸ்வரி (மலேசியா), காலஞ்சென்ற வாலாம்பிகை (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பரமசாமி, வேலுப்பிள்ளை, தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சந்திரவதனி, விநோதினி, இரவீந்திரன், மைலைநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஜெயக்குமாரின்(V.S.B.Group) அன்புப் பேரனும் விதுஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) லக்சுஜன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.09.2000) புதன் பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*அரசடி,*
*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.* (78582)

தகவல்
மனோரஞ்சிதம் (மகள்)
த.இரவீந்திரன் (பேரன்)


## மேலும் 2 ஜெனரேட்டர்கள்

யாழ்.மாவட்டத்தின் மின்சார விநியோகத்தை சீர்செய்வதற்காக மேலும் இரு ஜெனரேட்டர்கள் அரசினால் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா விடுத்த வேண்டுகோளையடுத்து இந்த இரு ஜெனரேட்டர்களும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள இந்த ஜெனரேட்டர்கள் நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேசங்களில் மின்சாரம் வழங்கப் பயன்படுத்தப்படவுள்ளன.

டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளையடுத்து பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மேலும் 3 ஜெனரேட்டர்கள் யாழ். குடாநாட்டில் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய விரைவில் வந்து சேரவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தொலைபேசி சேவை தடங்கல்

மானிப்பாய் முதல் சித்தன்கேணி வரையான பகுதியில் தொலைத்தொடர்புக் கேபிள்களைத் திருத்தும் பணிகள் இன்று இடம்பெறவுள்ளன.

இதன் காரணமாக சுதுமலை வீதி, சங்கரப்பிள்ளை வீதி மற்றும் மானிப்பாய் முதல் சித்தன்கேணி வரையான பகுதிகளில் தொலைத்தொடர்பு சேவையில்தடங்கல் இருக்கும் என்று ரெலிக்கொம் நிறுவனப் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## மின்னல் தாக்கியது

மின்னல் தாக்கியதால் வீடொன்றின் மின்பாவனைப் பொருள்கள் சேதம் அடைந்தன. பருத்தித்துறையில் கடந்த திங்களன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ரி.வி. அன்ரனாவையே மின்னல் தாக்கியது. அன்ரனா தொடர் வயர் முற்றாக எரிந்து போனதுடன் வீட்டின் மின்விளக்குகள், மெயின் சுவிச் மற்றும் மின்பாவனைப் பொருள்கள் சேதம் அடைந்தன. (இ-15)

## துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் சடலம்

கரணவாய் செல்வாபுரம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்ததாகத் தெரிவித்து 28 வயதுடைய இளைஞன் ஒருவரின் சடலம் கடந்த திங்கள் மாலை நெல்லியடிப் பொலிஸாரினால் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் வரை இந்தச் சடலத்துக்கு எவரும் உரிமை கோராததால் மரணவிசாரணை நடைபெற்றது. டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனை நடத்தினார்.

உரிமை கோரப்படாத விடத்து சடலத்தை அரச செலவில் இன்று அடக்கம் செய்யுமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (இ-117)

## தமிழ்க் கைதி மரணம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சின்னேஸ்வரன் சுதர்சன் (வயது 40) என்ற தமிழ்க் கைதி ஒருவர் கடந்த 16ஆம் திகதி நாகொட ஆஸ்பத்திரியில் மரணமானார் என் களுத்துறைப் பொலீஸார் அறிவித்துள்ளனர். (இ-7-186)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## ஆண்டு மிலேனியத்தில் அகவை ஒன்று முதலாவது பிறந்ததின வாழ்த்து



பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி மேற்கைச் சேர்ந்த

**சந்திரதேவா ~ அகல்யா தம்பதிகளின்**

*செல்வப் புதல்வி*

### செல்வி பவதாங்கினி

இன்று (20.09.2000) புதன்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அத்தைமார். சித்தப்பாமார், சித்திமார், அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (78540)

தகவல்:
இராசதுரை (அம்மப்பா)



## தெங்கு பனை வள தொழிலாளர் யூனியன்

(வடமாகாணம்)

நாடாளுமன்றத் தேர்தல், யாழ்.மாவட்டம்.

### நன்றி பாராட்டல்



நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் (10 ஒக்ரோபர் 2000)
ஓர் அபேட்சகராக
முன்னாள் உதவி மேயர்

### திரு.பி.எவ்.சேவியர்

அவர்களைத் தெரிவு செய்தமைக்காகவும், சமூக பொருளாதார செயற்பாடுகளில் பங்குகொண்டு எமது சமூக மேம்பாட்டிற்கு பாடுபட அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கியமைக்காகவும்
**தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு**
நன்றி பாராட்டுகின்றோம்.

தலைவர் (78573) செயலாளர்.



## நாடாளுமன்றத் தேர்தல்

**(10.10.2000) (யாழ்ப்பாண மாவட்டம்)**



தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்

**திரு.சி.சிவமகாராசா**

இல. 11

| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

எனது வேட்பாளர் விருப்பு இல. 11



தமிழர் விடுதலைக் கூட்டணிச் சின்னம் உதயசூரியனுக்கு எதிரே புள்ளடி இடுவதோடு எனது விருப்பு வாக்கு இலக்கம் 11க்கு மேலேயும் புள்ளடி இட்டு என்னை வெற்றிபெறச் செய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

(78226) **அன்பன் சிவமகாராசா**

# சமூகங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த அஷ்ரப் பாடுபட்டார்!

## தமிழர் விடுதலைக் கூட்டணி அஞ்சலி

கொழும்பு,செப்.20

தேசிய ஐக்கியத்துக்காக திடசங்கற்பம் கொண்ட அஷ்ரப் எல்லாச் சமூகங்களிடையேயும் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு செயல்முறைக்கு உகந்த பல நடவடிக்கைகளை எடுத்தார். எல்லாச் சமூகங்களிலும் அவருக்கு நெருங்கிய நண்பர்களாகப் பலர் இருந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும், திருமலை மாவட்ட எம்.பியுமான இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அஷ்ரப் மறைவு குறித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சர் கௌரவ எம்.எச்.எம்.அஷ்ரப் ஹெலி விபத்து ஒன்றில் உயிரிழந்த செய்தி பலத்த அதிர்ச்சியைத் தந்துள்ளது.

அவரது மரணம் முஸ்லிம் சமூகத்துக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். அத்துடன் அவரது மறைவு தமிழ் பேசும் மக்களுக்கும் முழு நாட்டுக்குமே பாரிய பாதிப்பாகவும் அமைந்துள்ளது.

மறைந்த தலைவர் அஷ்ரப்பின் அரசியல் பிரவேசத்தின் ஆரம்பம் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றுடன் இணைந்தே அமைந்தது. இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகள் குறித்து தெளிவான புரிந்துணர்வை அவர் கொண்டிருந்தார். தமிழர் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் சீடராகவும் அவரினால் ஈர்க்கப்பட்டவராகவும் அஷ்ரப் விளங்கினார். தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நெருக்கமாகச் செயற்பட்டு வந்தார். அஷ்ரப் விடாமுயற்சியுடைய உழைப்பாளி. அவர் தனது மக்களுக்கான ஓர் உள்ளுணர்வைக் கொண்டிருந்தார். நாட்டில் முஸ்லிம் சமூகத்துக்கு சரியான இடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை உறுதிசெய்வதற்காக அவர் கடுமையாகப் பாடுபட்டார். அவர் தனது நாடாளுமன்ற வாழ்விலும் குறிப்பாக தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த காலத்திலும் தனது மக்களுக்காக அளப்பரிய சேவை புரிந்துள்ளார்- இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)


(78229)



வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!

(ஈ.பி.டி.பி.)

தமிழ் முஸ்லீம் உறவுதான்
தாயக விடிவிற்கு திறவுகோல்!
அளித்திடுவீர் உங்கள் வாக்குகளை
வீணைச் சின்னத்திற்கே!

தமிழ் பேசும் மக்களின் நீண்டகால வரலாற்றை எடுத்தியம்ப தொல்பொருட்கள் சேகரித்துப் பேணிப் பாதுகாக்க, அச்சுவேலியில் கவின்கலை மன்றம் ஈ.பி.டி.பி.யினால் அமைக்கப்பட்டுள்ளது.


## முதுமாணிப்பட்டம் பெற்ற ஆசிரியர்

# பதவி உயர்வுக்கு 50வயது கட்டுப்பாடு நீக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.20

முதுமாணிப்பட்டம் பெற்ற ஆசிரியர்கள் முதலாம் தரத்துக்கு பதவி உயர்வு பெறுவதற்கு 50 வயது அடையவேண்டும் என்ற கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

கல்வி முதுமாணி, விஞ்ஞான முதுமாணி, தத்துவவியல் முதுமாணி போன்ற பட்டங்களைப் பெற்றவர்களுக்கு 01.01.95ஆம் திகதியில் இருந்து வகுப்பு ஒன்றுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுவந்தது.

ஐம்பது வருடத்தை அடைவதுடன் 20 புள்ளிகளைப் பெறுவர்களுக்கே இந்தப்பதவி உயர்வு வழங்கப்பட்டுவந்தது.

இனிமேல் 20புள்ளிகளை மட்டும் பெற்றால் பதவி உயர்வைப் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-3)


MOBILE NET COMPUTER SERVICES MCS

*புலமைப்பரிசில் பரீட்சை*

மேற்படி பரீட்சை சனிக்கிழமை (23-09-2000) நடைபெறும். அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Director


# ஹெலியில் சென்றோரின் பெயர்ப் பட்டியல் இல்லை!

## விமானப்படை கைவிரிப்பு

அமைச்சர் அஷ்ரப்புடன் ஹெலியில் சென்றவர்களின் பெயர்ப்பட்டியல் விமானப்படையினரிடம் இல்லாததால் பயணம் செய்தோரின் விவரங்களை அறிவதில் குழப்பநிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலியில் செல்வோரின் பெயர் விவரப்பட்டியலைத் தருமாறு தாங்கள் கோரியிருந்த போதிலும் சம்பந்தப்பட்டவர்கள் அதனைத் தராததால் பின்னர் அவர்களது விவரங்களை அறிவதற்காக துறைமுக அபிவிருத்தி அமைச்சுடன் தொடர்பு கொண்டு அவர்கள் தந்த பட்டியலையே தாங்கள் வெளியிட்டதாகவும் விமானப்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 13 சடலங்களே மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

### இந்தோனேசியா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கான ஐ.நா.தூதரகத்துக்கு நேற்றுமுன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தோனேசியாவின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் இந்த இருவரையும் கடந்த பல மாதங்களாகத் தடுத்துவைத்திருப்பதுடன் அவர்களை இலங்கைக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுத்ததை அடுத்தே உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. (இ-7)

### தபால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் உரிய விண்ணப்பதாரருக்கு அவற்றை அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். தேர்தல் திணைக்களம் மேற்கொண்டிருந்தது.

தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த சுமார் 45 க்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் நேற்று இரவு 9 மணிவரை செயலக தேர்தல் அலுவலகத்தில் தங்கியிருந்து தபால மூல வாக்காளர்களுக்கான வாக்குச் சீட்டுக்களை தபாலில் சேர்ப்பிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வாக்குச் சீட்டுக்களை தபாலகங்களில் ஒப்படைப்பதற்கென யாழ்.செயலகத்தில் விசேட தபால் பிரிவு ஒன்றும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. (இ-9-5)

# பொ.ஐ.முன்னணியின் பிரசாரத்தை தடைசெய்யக் கோரி நீதிமன்றில் மனு

## ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்தது

கொழும்பு,செப்.20

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது தேர்தல் பிரசார நடவடிக்கைக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ரூபவாகினி ஆகியவற்றைப் பயன்படுத்துவதை தடைசெய்ய வேண்டும் என்று கோரி ஐக்கிய தேசியக் கட்சி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது.

ஐ.தே.கவின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேர்தல் சட்டவிதிகளுக்கு அமையப் பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சி ஒன்றுக்கு 90 நிமிட நேரமே ஒலிபரப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் இதுவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூலம் 340 நிமிடமும் ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் 120 நிமிடமும் தனது தேர்தல் பிரசாரங்களைச் செய்துள்ளது. இத்தகைய முறையற்ற சம்பவங்களால் மக்களின் வாக்குரிமைக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது - இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-8)

# யாழ்.தபாலகத்தில் நேற்று 'பக்ஸ்' சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.பிரதம தபாலகத்தல் 'பக்ஸ்' மூலம் உள்ளூர் மற்றும் வெளியிடங்களுக்கான செய்திகளை பொது மக்கள் அனுப்பி வைப்பதற்கான நிகழ்வு நேற்றுக்காலை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தருக்கு ஆசிரியர் ஒருவரினால் அனுப்பி வைக்கப்பட்ட 'பக்ஸ்' செய்தியுடன் தொடர்ந்து இந்தச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டதாக யாழ்.பிரதம தபால் அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் யாழ். பிரதம தபால் அலுவலகத்திலிருந்து வேறு தபால் நிலையங்களுக்கும் மற்றும் அரசு, தனியார் நிறுவனங்களுக்கும் 'பக்ஸ்' மூலம் செய்திகளை அனுப்பி வைப்பதற்கான கட்டணங்களின் விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றின் விவரங்கள் வருமாறு:-

* யாழ்.பிரதம தபால் அலுவலகத்தில் இருந்து வேறு தபால் அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் ஒரு பக்கச் செய்திக்கு 35 ரூபாவும். மேலதிக பக்கங்களுக்கு தலா 10 ரூபாவும்.
* தபாலகத்திலிருந்து அரசு, தனியார் நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் ஒரு பக்கச் செய்திக்கு 30 ரூபாவும் மேலதிக பக்கங்களுக்கு தலா 10 ரூபாவும்.
* தபாலகங்களுக்கு அனுப்பப்படும் அரைப்பக்கச் செய்திகளுக்கு 25 ரூபாவும் மேலதிக பக்கங்களுக்கு தலா 10 ரூபாவும்.
* அரச, தனியார் நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் அரைப்பக்கச் செய்திகளுக்கு 20 ரூபாவும் மேலதிக பக்கங்களுக்கு தலா 10 ரூபாவும்.
* வேறு இடங்களிலிருந்து பிரதம தபாலகத்துக்குக் கிடைக்கும் 'பக்ஸ்' செய்திகளை விநியோகம் செய்வதற்கு ஒரு பக்கத்திற்கு 15 ரூபாவும் மேலதிக பக்கங்களுக்கு தலா 10 ரூபாவும்.

எனவே பொதுமக்கள் யாழ். பிரதம தபாலகத்தின் 'பக்ஸ்' இலக்கம் 3567 ஊடாகத் தமது செய்திகளை அனுப்பி வைக்கவோ வேறு இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளவோ முடியும் -

என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் பயனாக இந்த வசதி கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10-ரி)

### அஷ்ரப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திபதியை நேற்று முன்தினம் காலை கோரியிருந்தபோதும் -

அந்த அமைச்சை தமது பொறுப்பில் எடுக்கும், வர்த்தமானி அறிவித்தலை அன்று மாலை ஜனாதிபதி விடுத்திருந்தது தெரிந்ததே.

நேற்று நடந்த சந்திப்பில் தமது முடிவை மாற்றி ரவூப் ஹக்கீமுக்கு அமைச்சர் பதவி வழங்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளார்.

அதே சமயம் - முஸ்லிம் காங்கிரஸின் ஏனைய கோரிக்கைகளையும் நிறைவேற்ற ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அஷ்ரப்பின் மனைவியை திகாமடுல்ல மாவட்ட வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்ற முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கையும் ஏற்கப்பட்டு அதற்கான பணிப்புரை நேற்று விடுக்கப்பட்டுள்ளது.(இ-3-8)


ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

* 05.09.2000 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச் சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

புலோலி T.P - 070-212720 (78575) நல்லூர் T.P - 021-2604

மக்ஷெல் கவுஸ்

மற்றும் ஒரு தொகுதிப் படங்கள் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

T.P No. - 2008 2137 (78578) 20,யுபிலி பஜார் யாழ்ப்பாணம்.

மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்துக்காகவும்
வாக்களிப்போம்!
தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்



த.சுபத்திரன் (றொபேட்)

இல. 3

சுயேச்சைக் குழு - 2 X

ஈ.பி.ஆர்.எல்.எவ்



அ.வரதராஜப்பெருமாள்

இல. 1

(78228)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.09.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.